விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 01 சனிக்கிழமை (18.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 303

## நீதியை நிறைவேற்றினேன் மகிந்த ஜனாதிபதியானார்!

### இல்லாவிடில் சிறையில்தான் என்கிறார் முன்னாள் நீதியரசர்

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஹெல்பிங் அம்பாந்தோட்டை வழக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சிறையில் அடைப்பதற்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் நான் அந்த நேரத்தில் எனக்குத் தெரிந்த வரையில் நீதியை நிறைவேற்றினேன். இல்லாவிட்டால் அவர் இன்று ஜனாதிபதியாகி இருக்க முடியாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கூறியுள்ளார். லண்டன் பிபிசிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க



## ஐ.நாவில் முறையிட பொன்சேகா திட்டம்

(கொழும்பு)

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா ஐக்கிய நாடுகள் அமைப்பில் முறைப்பாடு செய்ய உள்ளதாக அறிவித்துள்ளார்.

வாக்குரிமை பறிக்கப்பட்டது தொடர்பில் முறைப்பாடு செய்ய உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நீதிமன்றக்

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் மீதான தடையை நீக்க ராமதாஸ் முயற்சி!

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின மீதான தடையை உடனடியாக நீக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்து ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் பிறப்பித்த ஆணை செல்லாது என லக்சம்பேர்க்கில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தீர்ப்பு வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். உரிமையும், அதிகாரமும் கோரி ஈழத்தமிழர் நடத்தி வரும் அறவழிப் போராட்டத்திற்கு உலகின் ஆதரவை திரட்ட இது உதவும்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்புச் சபையின் தீர்மானம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது

### உலகத் தமிழர் பேரவை குற்றச்சாட்டு

(லண்டன்)

புலம்பெயர் தமிழர்கள் மற்றும் அமைப்புக்களை தடை செய்வதற்காக இலங்கை அரசாங்கம் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையின் 2001 ஆம் ஆண்டின் தீர்மானத்தை துஷ்பிரயோகம் செய்வதாக குற்றஞ்சாட்டியுள்ள உலகத் தமிழர் பேரவை, அது குறித்து பாதுகாப்புச் சபையின் கவனத்துக்கு கொண்டு செல்லுமாறு பிரித்தானிய அரசாங்கத்தை கோரியுள்ளது.

இந்த விடயம் குறித்து உலக தமிழர் பேரவையின் தலைவர் வண. டாக்டர் எஸ்.ஜே.இமானுவேல் அவர்கள், பிரித்தானிய பிரதமருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அமெரிக்காவின் செப்டெம்பர் 11 தாக்குதலை அடுத்து ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட 1373 ஆம் இலக்க தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அரசாங்கம் 16 புலம்பெயர் அமைப்புக்களையும், 424 தனிநபர்களையும் தடைப் பட்டியலில் சேர்த்துள்ளது.

ஆனால், இந்த தடைப்பட்டியலை தயாரித்த போது அதற்கான உரிய நடைமுறைகளை இலங்கை அரசாங்கம் கையாளவில்லை என்று கூறுகின்ற உலகத் தமிழர் பேரவையின் சுரேன் சுரேந்திரன்,

20 ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் அடுத்த மாதம் இரண்டாம் கட்ட விசாரணை!

(முல்லைத்தீவு)

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான இரண்டாம் கட்ட பகிரங்க சாட்சி விசாரணை அமர்வுகள் அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கரைத்துறைப்பற்று மற்றும் ஒட்டுசுட்டான் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஆணைக்குழுவின சாட்சி விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரையான நான்கு நாட்களுக்கு பகிரங்க சாட்சி விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 2 ஆம் மற்றும்

20 ஆம் பக்கம் பார்க்க


O/L
மாதிரி வினாத்தாள்
க.பொ.த (சாதாரண) தர
மாணவர்களுக்கு...
கொழும்பு கல்வி வலயத்தால்
தயாரிக்கப்பட்ட
மாதிரி வினாத்தாள்
உள்ளே

## வீட்டில்தான் இருக்க வேண்டும் ஜெயலலிதாவுக்கு பாஜக பூட்டு

(சென்னை)

ஜெயலலிதாவிற்கு சில நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது என்றும், அவர் வீட்டிலேயே தான் இருக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் நிபந்தனை விதித்துள்ளதாகவும் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்தார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா உள்பட 4 பேருக்கு உச்ச நீதிமன்றம் பிணை வழங்கி உத்தரவிட்டது. ஜெயலலிதா வழக்கு விசாரணையையொட்டி உச்ச நீதிமன்றத்திற்கு பா.ஜனதா தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி



20 ஆம் பக்கம் பார்க்க

## அதிவேகப் பாதை நிர்மாணம் தாமதம்

(கொழும்பு)

வடக்கிற்கான அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிகளை தொடக்கி வைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பிற்போடப்பட்டுள்ளது.

வடக்கிற்கான அதிவேகப் பாதை மற்றும் கண்டி வரையான அதிவேகப் பாதைகளுக்கான நிர்மாணப் பணிகள் இம்மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்தது. ஜனாதிபதி தலைமையில் இதற்கான வைபவங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு, அர

20 ஆம் பக்கம் பார்க்க

## ஜெயலலிதாவுக்கு இடைக்கால ஜாமீன்

(சென்னை)

சொத்துக் குவிப்பு வழக்கில், குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு, 100 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு 4 ஆண்டு சிறை தண்டனையும் பெற்று பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணை எதிர்வரும் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி அன்று நடைபெறும் என்றும், அதுவரை அவருக்கு இடைக்கால பிணை வழங்கப்படுகிறது என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை நிறுத்தி வைக்கக் கோரியும், ஜாமீன் வழங்கக் கோரியும் ஜெயலலிதா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்று உச்சநீதிமன்றத்தில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தத்து மற்றும் நீதிபதிகள் மதன் பி.லோக்கூர், ஏ.கே. சிக்ரி ஆகியோர

20 ஆம் பக்கம் பார்க்க

## பல பாகங்களில் மழை பெய்யலாம்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் பலபாகங்களிலும் இன்று மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளதென்றும் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரை மழை பெய்யலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பகல் மற்றும் இரவு நேரங்களில மழைக்கான சாத்தியம் அதிகமாக இருப்பதுடன், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, தெற்கு கடலோர பகுதிகளிலும் அதிக மழைக்கான சாத்தியம் உண்டு என்றும் திணைக்களம மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜெயலலிதாவுக்கு பிணை அதிமுகவினர் கொண்டாட்டம்



(சென்னை)

சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கப்பட்டதை தொடர்ந்து சென்னை உட்பட தமிழகம் முழுவதும் அதிமுகவினர் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகளை வழங்கியும் உற்சாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

சொத்துக்குவிப்பு வழக்கில் 4 ஆண்டு சிறைத் தண்டனை பெற்று பெங்களூர் சிறையில் அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா இருக்கும் நிலையில், அக்கட்சியின் 43-வது ஆண்டு தொடக்க விழா சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

காலை 9.30 மணிக்கு எம்ஜிஆர் சிலைக்கு அவைத் தலைவர் மதுசூதனன் மாலை அணிவித்தார். பின்னர் கட்சியின் கொடியை ஏற்றிய அவர், ஆண்டு விழா மலரை வெளியிட்டார். இதனை அமைச்சர் டாக்டர் விஜய பாஸ்கர் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் உட்பட ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

கடந்த ஆண்டு ஆட்டம், பாட்டம், பட்டாசு, இனிப்பு, கச்சேரி என இருந்த அ.தி.மு.க ஆண்டு விழா இந்தாண்டு, ஜெயலலிதா சிறையில் இருந்ததால் களையிழந்து காணப்பட்டது.

காலையில் களையிழந்து காணப்பட்ட கட்சி அலுவலகம், நண்பகலில் ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கப்பட்டதையடுத்து, தமிழகம் முழுவதும் கட்சியினர் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடியதால், உற்சாகமாக காணப்பட்டது.

அதேபோன்று போயஸ் கார்டனில் உள்ள ஜெயலலிதா வீட்டின் முன் குவிந்த அ.தி.மு.கவினர் பட்டாசு வெடித்து ஆட்டம், பாட்டம் கொண்டாட்டம் என அசத்தினர். இதேபோல் தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. வினர் பட்டாசு வெடித்து தங்கள் மகிழ்ச்சியை கொண்டாடினர்.

**பெங்களூரிலும் கொண்டாட்டம்**

மேலும் ஜெயலலிதா அடைக்கப்பட்டுள்ள பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறை வளாகம் அருகே திரண்டிருந்த அதிமுகவினரும், ஜெயலலிதாவுக்கு பிணை கிடைத்த தகவல் அறிந்து உற்சாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜெயலலிதா சிறையிலிருந்து எப்போது வெளியே வருவார் என காத்திருக்கும் அவர்கள், அவரை பார்க்க ஆவலுடன் காத்துக் கொண்டுள்ளனர். (எ-11)

# கணவன் மனைவியை கட்டி வைத்து கொள்ளையடித்த திருடர்கள்

## புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

கணவன்- மனைவி ஆகிய இருவரையும் கட்டிவைத்த திருடர்கள் பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையடித்த சம்பவமொன்று புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதியில் அமைந்துள்ள குருக்கள் ஒருவருடைய வீட்டிலே இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு அவ்வீட்டினுள் நுழைந்த திருடர்கள், அங்கிருந்த கணவன மனைவியை கட்டி வைத்து விட்டு, அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 25 பவுண் நகை மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் பணம் ஆகியவற்றைக் கொள்ளையிட்டுள்ளனர்.

இந்த கொள்ளை சம்பவத்தால் பாதிக்கப்பட்ட குருக்கள் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## வெள்ளைப்பிரம்பு தினம்

யாழ்ப்பாண லயன்ஸ் கழகமும் யாழ். விழிப்புலனற்றோர் சங்கமும் இணைந்து நடத்தும் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ப.கனகசபை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் சுகுணரதி கலந்துகொள்ளவுள்ளார். (எ)

# அரசுக்கு எதிராக அத்துரலியே தேரர் பிளவுபடும் நிலையில் ஹெல உறுமய?

(கொழும்பு)

அத்துரலியே ரத்ன தேரர் அரசாங்கத்துக்கு விடுத்துள்ள எச்சரிக்கை தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய கட்சி இரண்டாகப் பிளவுபடும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் பிரதித்தலைவராக இருப்பவர் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர்.

இவர் தனியாக "தூய்மையான நாளை" என்றொரு அமைப்பையும் நடத்தி வருகின்றார். அரசியலின் பரிசுத்தம், பௌத்த மதம் அரசின் உத்தியோகபூர்வ சமயமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பன இதன் கொள்கைகளாகும்.

இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ ரத்துச் செய்த சுயாதீன ஆணைக்குழுக்களின் மீள் செயற்பாடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து அத்துரலியே ரத்ன தேரர் அரசியலமைப்பின் 19-வது திருத்தச் சட்டமொன்றை வலியுறுத்தி வருகின்றார்.

இந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றாது மீண்டுமொரு ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்வாராயின், மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்போம் என்றும் அவர் பகிரங்கமாக அறை கூவல் விடுத்துள்ளார்.

ரத்ன தேரரின் இந்தக் கருத்து அவர் சார்ந்துள்ள ஹெல உறுமய கட்சிக்குள் பிளவுபடும் நிலையை உருவாக்கியுள்ளது.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க, மாகாண அமைச்சர் உதய கம்மன்பில, மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, எல்லாவல மேதானந்த தேரர், எல்லே குண வங்ச தேரர் போன்றவர்கள் தொடர்ந்தும் மகிந்தவுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கின்றனர்.

இந்நிலையில் ரத்ன தேரரின் கருத்து அவரது "தூய்மையான நாளை" அமைப்பின் கருத்து என்றும் ஹெல உறுமயவுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்றும் ஒரு தகவல் கசிய விடப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக நாளை ஜாதிக ஹெல உறுமய கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, தமது கட்சியின் நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தவுள்ளது.

இதன்போது கட்சி அரசாங்கத்துக்கு சார்பான நிலைப்பாட்டை எடுக்கும் பட்சத்தில், ஹெல உறுமயவிலிருந்து மேலும் சிலர் வெளியேறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-11)

# த.தே.கூவுடன் பேசவில்லை ஐ.தே.கட்சி அறிவிப்பு!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தை நடத்தியதாக சில ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இவ்வாறான பேச்சுவார்த்தை எதனையும நடத்தவில்லை என கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு போலியான குற்றச்சாட்டை முன் வைத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக வெளிக்காட்டிக் கொள்ளும கபட நோக்கில் இவ்வாறு பிரசாரம் செய்யப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தேசபற்றற்ற விதத்தில் கட்சி செயற்படுவதாக மக்களிடம் சொல்வதே இந்தப் பிரசாரத்தின் நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொண்ட சில கூட்டணிக் கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ள விரும்புவதாகவும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல்களை இலக்கு வைத்து பல்வேறு அரசியல் கட்சிகளுடன் [illegible] வதாகக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


## மரண அறிவித்தல்

### இரத்தினசாமி-றஞ்சிதமலர் (சின்னகிளி)



பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், மூத்த நயினார் கோவிலடி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசாமி-றஞ்சிதமலர் (சின்னகிளி) 17.10.2014 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் சிவராணி அம்மா தம்பதியினரின் அன்பு மகளும் இரத்தினசாமியின் பாசமிகு மனைவியும், வேலாயுதபிள்ளை, சரோஜா, சரஷ்வதி, உதயகாந்தன், காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோபிநாத், திருஞானம், தர்மேந்திரா, பிரதீப், செந்தூரன், ஜீவராஜ், சிவானுஜா, தர்மினி, பிறேம்நாத் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.10.2014 அன்று (ஞாயிற்றுக்கிழமை) அவரின் இல்லத்தில் காலை 11 மணியளவில் நடைபெற்று அதனை தொடர்ந்து பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இரத்தினசாமி குடும்பத்தினர்.

(சி-8796)


# பெண்ணை கைது செய்த பொலிஸாருக்கு மூன்று இலட்சம் ரூபாய் அபராதம்

(கொழும்பு)

அப்பாவிப் பொதுமக்களைத் துன்புறுத்தும் பொலிஸாருக்கு எதிராக பிரதம நீதியரசர் தீர்ப்பொன்றை வழங்கியுள்ளார்.

கொட்டாவை பிரதேசத்தில் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்வதற்காக பொலிஸார் சென்றபோது அவர் வீட்டில் இருக்கவில்லை. அதனையடுத்து சந்தேக நபரின் சகோதரியை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துவந்த பொலிஸார், சில மணித்தியாலங்கள் வரை அவரை பொலிஸ் காவலில் தடுத்து வைத்திருந்தனர். ஒரு கைக்குழந்தையின் தாயான அப்பெண் இதன் காரணமாக அநீதி, அவமானம் என்பவற்றுக்கு ஆளாகியிருந்தார்.

இதனையடுத்து அவர் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணையின் தீர் ப்பை வழங்கிய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் தலா ஒன்றரை லட்சம் வீதம் மூன்று லட்சம் பணத்தை அந்தப் பெண்ணுக்கு நஷ்டஈடாக வழங்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் அந்தப் பெண்ணை அநியாயமாக தடுத்து வைத்தது தொடர்பில் குறித்த பொலிஸ் அதிகாரிகள் இரண்டு பேரையும் உடனடியாக தற்காலிக பணி நீக்கம் செய்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸ்மா அதிபருக்கு, பிரதம நீதியரசர் உத்தரவிட்டுள்ளார். (எ-11)

# எயார்லைன்ஸ்க்கு 6 புதிய விமானம்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனம் மேலும் 06 விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜெயரத்னவின் அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஏற்பவே இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், இவ்வருடம் தொடக்கம் எதிர்வரும் 2015 இறுதிப் பகுதிவரை எயார் பஸ் நிறுவனத்திடமிருந்து மேற்படி விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இவ்வருட இறுதிக்குள் குறித்த எயார் பஸ் நிறுவனத்திடமிருந்து ஏ-300 ரக முதல் விமானம் கொள்வனவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் யாழ்.புகையிரத நிலையத்திற்கு அண்மையில் 1 பரப்பு 7 குளி கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
**0779845854**

(8071)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீதான தடை நீங்க ஐ.தே.க.தலைவர் காரணம்

## அமைச்சர் விமல் குற்றச்சாட்டு



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்குவது குறித்து ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் வெளியிட்ட அறிவிப்பிற்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் தொடர்பு இருப்பதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் லண்டனுக்கு விஜயம் செய்திருந்ததாகவும் இதன்போது தடை நீக்குவது குறித்து ஏதேனும் இணக்கப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் ஐரோப்பிய நாடுகளில் சுதந்திரமாக செயற்பட முடியும் என்ற ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் அறிவிப்பு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து வெளியிடப்பட்டுள்ளது.

புலிகள் தோற்கடிக்கப்பட்ட போது ஜீ.எஸ்.பி வரிச் சலுகையை இரத்து செய்து அழுத்தம் கொடுக்க ஐரோப்பிய ஒன்றியம் முயற்சித்தது.

எனினும், இந்த அழுத்தங்களுக்கு ஜனாதிபதியோ அரசாங்கமோ அடிபணியவில்லை. நாட்டின் ஆடைக் கைத்தொழில் துறைக்கு விதிக்கப்பட்ட தடையினால் நாடோ ஜனாபதியோ பாதிக்கப்படவில்லை.

இலங்கையில் ஆட்சி அதிகாரத்தில் மாற்றம் ஏற்படுத்தவே முயற்சிக்கப்படுகின்றது. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் புலிகளை தூண்ட வேண்டும். ஐரோப்பாவில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களை கிரங்கடிக்கச் செய்ய வேண்டும். புலிகளின் ஊடாக நாட்டில் தீ மூட்ட முயற்சிக்கப்படுகின்றது, ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த நோக்கத்தை மக்கள் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் ஐரோப்பிய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியவுடன் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த சக்திகளின் உள்நாட்டு கைப்பொம்மைகள் யார் என்பதனை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் எந்த காரணத்திற்காகவும் இந்த சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் அறிவிப்பு குறித்து சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ)


## உடனடியாக தேவை

077 111 6770, மாதம் 18000/=, 25000/=, 30000/= வரை வருமானம் பெறலாம். 'கொழும்பை அண்மித்த' பிரதான (195) தொழிற்சாலைகளில் பல வெற்றிடங்கள் (ஜேம்/ டொபி/ PVC/ கிளவுஸ்/ பால்மா) இன்னும் பலவற்றுக்கு உற்பத்தி, பொதியிடல், லேபல், பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை (யாழ்., கிளிநொச்சி, வவுனியா, மன்னார்) பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள். உணவு+ தங்குமிடம் சகாய விலைகளில் வருகை அன்றே வேலை.

தொடர்புகளுக்கு- 077 683 8231

(அ-8785)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திரு சின்னான் நடேசன்



பிறப்பு 05.02.1934

இறப்பு 10.10.2012

நெஞ்சில் நின்று நீங்காது பதிந்து
நெருட வைக்கும் நெகிழ வைக்கும்
என்றென்றும் உம் நினைவுகளுடன்
எம் நெஞ்சில் சுமந்தபடி வாழ்ந்திடுவோம்.

தகவல்:-
தும்பளை தெற்கு, பருத்தித்துறை.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பிறவாமக்கள்.

(அ-8786)



## பவள விழா அழைப்பு



அகவை எழுபத்தைந்து காணும்
கலைப்பிரவாகம்
கலாபூஷணம்
சங்கீதபூஷணம்
உயர்திரு.சுப்பையா கணபதிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

தலைவர்:- சங்கீதபூஷணம் ச.பாலசிங்கம்
இடம்:- இளங்கலைஞர் மன்ற மண்டபம்
காலம்:-19-10-2014 ஞாயிறு பி.ப.2.30 மணி

விழாநாயகன் கொண்டலடி வைரவர் ஆலயத்திலிருந்து யாழ். பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் சகிதம் அழைத்து வரப்பட்டு விசேட நாதஸ்வரக் கச்சேரியும் சிறப்பு இசையரங்கும் இடம்பெறும்.

கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்:-விழா ஏற்பாட்டுக்குழு

(0608)


## இராசி பலன்

18.10.2014
(ஐப்பசி 01, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.57 மணிக்கு
தசமி முன்னிரவு-8.05 மணிவரை
ஆயிலியம் மாலை-6.43 மணிவரை
இராகுகாலம்-9.02-10.32 மணிவரை
சுபநேரம்-3.02-4.32 மணிவரை

வளவன்

**மேடம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, கட்டடங்கள் கட்டும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, ஆடம்பரப் பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** தொழிலில் இருந்த போட்டிகள் மாறும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், பயணங்களால் பலனுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்:** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கடினமான வேலைகளைக் கூட சுலபமாகச் செய்து முடிப்பீர்கள்.

**கடகம்:** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை கடைப் பிடிக்கவேண்டிய நாள், பிள்ளைகளால் சிறு விரயங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, விமர்சிப்பவர்களை எதிர்த்துப்பேசாமல் செல்வீர்கள்.

**சிம்மம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை, காரியங்கள நிறைவேற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**துலாம்:** இல்லத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தூரதேசச்செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், விருந்தினர் வருகையுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** விட்டுக்கொடுத்துச்செல்வதன் மூலம் அமைதிகாண வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது.

**மகரம்:** களஸ்திர நன்மையுண்டு, அடிப்படை வசதிவாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வீர்கள், மறக்கமுடியாத சம்பவங்கள் நடைபெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கும்பம்:** தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கடன்சுமை குறைய புதிய உத்தியைக் கையாள்வீர்கள்.

**மீனம்:** சடங்கு சம்பிரதாயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியம் இன்று நடைபெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவ காலத்தில் தவறவிடப்பட்ட பொருட்களை பெற்றுக்கொள்ளமுடியும்

(தும்பளை)


வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் மஹோற்சவ காலத்தில் பக்தர்களால் தவறவிடப்பட்ட உரிமை கோரப்படாத பொருட்கள் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக உற்சவ காலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.




இதில் சங்கிலி, பணத்துடன் கூடிய கைப்பைகள், கைத்தொலைபேசிகள் வங்கி ஏ.ரி.எம் அட்டை மற்றும் மோட்டார் சைக்கிள் திறப்புக்கள், திறப்பு கோர்வைகள் தலைக்கவசம் என்பன தவறவிடப்பட்டு உரிமை கோரப்படாது காணப்படுகின்றது.

மேற்படி பொருட்களை தவறவிட்ட உரிமையாளர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் தகுந்த ஆதாரங்களை காட்டி பெற்றுக் கொள்ள முடியும் என பிரதேச செயலர் த. ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ-19)

நன்றி: மிரர்




# பரிசு பெறுபவர்களின் இலக்கங்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் உற்சவகால அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் பரிசு பெறுபவர்களின் இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் முதலாம் பரிசு-13125, இரண்டாம் பரிசு-66106, மூன்றாம் பரிசு-60683, நான்காம் பரிசு-63225 ஆகிய இலக்கங்களை உடையவர்களும்

ஆறுதல் பரிசுகளை

ஐந்தாம் பரிசு-03938, ஆறாம் பரிசு-74445, ஏழாம் பரிசு-68168, எட்டாம் பரிசு-45040, ஒன்பதாம் பரிசு-18225 ஆகிய இலக்கங்களை உடையவர்களும் பெறுகின்றனர்.

இவ் அதிர்ஷ்டப் பொருட்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் கோயில் வீதி, முதலாம் ஒழுங்கையில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.விழிப்புலனற்றோர் சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (இ

# திருக்குறள் மனனப்போட்டியில் யாழ்.மாணவி மூன்றாமிடம்



மாகாண மட்ட திருக்குறள் மனனப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் விரைவு கணித போட்டியில் ஆறாம் இடத்தையும் யா/ வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் மாணவி கோவர்த்தனி சொர்க்கநாதன் பெற்றுள்ளார்.

இவர் வலய மட்ட திருக்குறள் மனனப்போட்டியில் முதலாம் இடம்பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-60)

# ஆவணக் குறுந்திரைப்படங்களை திரையிடல்

(யாழ்ப்பாணம்)

சமகாலக்கலை கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் திரையிடலில் ஆறாவது நிகழ்வாக கண்ணன் அருணாசலத்தின் மண்ணெண்ணெய், கூத்து, பேப்பர் ஆகிய ஆவணக் குறுந்திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இவ் ஆவணக் குறுந்திரைப்படங்கள் கடந்த கால யாழ்ப்பாணத்தின் இருப்பை கண்டடைவதாக அமைவதோடு இவை இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் திரையிடப்பட்டவையாகும்.

மேற்படி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை யாழ். நல்லூர் கோவில் வீதியில் உள்ள சமகாலக்கலை கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தில் இடம் பெறவுள்ளது.

கண்ணன் அருணாசலம் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர் என்பதுடன் இவர் இப் படைப்புக்கான சர்வதேச விருதை பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ

# மீள்குடியேற்றம் தொடர்பில் சர்வமதக் குழு கலந்தாய்வு

யாழ்.சர்வமதக்குழுவின் கலந்தாய்வு அரங்கு எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பிரதான வீதியிலுள்ள கிறிஸ்து நாதர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆய்வரங்கில் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களின் மீள்குடியேற்றங்கள், முகாம்களில் உள்ள மக்களின் அடிப்படை வசதிகள், தென்பகுதி மக்களுடன் நல்லுறவை கட்டியெழுப்புவதற்கான நிகழ்வுகள் கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே சர்வமதக் குழுவின் உறுப்பினர்களை கலந்து கொள்ளுமாறு யாழ்.சர்வமதக் குழுவின் செயலாளர் அருட்தந்தை ஐ.டி. ஜிக்சன் அடிகள் தெரிவித்துள்ளார். (இ-51)

# பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து முல்லை.கொக்கிளாய்வரை பேருந்து சேவை

அரச, தனியார் உத்தியோகத்தர்களினதும் மற்றும் பயணிகளினதும் வேண்டுகோளுக்கமைய பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து கொடிகாமம், பரந்தன், முல்லைத்தீவு ஊடாக கொக்கிளாய் வரையான பேருந்துச் சேவை நாளை மறுதினம் 20 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து செயலாற்றப்படும் என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு முகாமையாளர் காரியாலயம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொக்கிளாய் பேருந்துச் சேவையானது காலை 5.15 மணிக்கும் முற்பகல் 10.30 மணிக்கும் பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமாகி கொடிகாமம், பரந்தன், முல்லைத்தீவு ஊடாக கொக்கிளாய் வரைக்கும் செயலாற்றப்படுவதுடன் பின்னர் கொக்கிளாயிலிருந்து முற்பகல் 10 மணிக்கும் பி.ப 3 மணிக்கும் புறப்பட்டு முல்லைத்தீவை வந்தடைந்து பின்னர் அங்கிருந்து பி.ப ஒரு மணி, பி.ப 4 மணிக்கு புறப்பட்டு பரந்தன்- கொடிகாமம் ஊடாக பருத்தித்துறையை சென்றடையும் என்பதனை அறியத்தருகின்றோம் என அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

# கட்டணம் அறவிடப்படும்

(கரணவாய்)

கரவெட்டி கால்நடை வைத்திய அலுவலகங்களுக்குட்பட்ட கால்நடை வளர்ப்போர் தமது மாடுகளுக்கு கட்டணம் செலுத்தி சினைப்படுத்தல் ஊசியை ஏற்ற முடியும் என கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

எனவே மாடுகளின் உரிமையாளர்கள் கால்நடை வைத்திய அலுவலகத்திற்கு வருகை தந்து விண்ணப் பப்படிவங்களை பூர்த்திசெய்து தமது மாடுகளுக்கு ஊசியினை கட்டணம் செலுத்தி ஏற்றிக்கொள்ள முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-60)

# உலக கைகழுவுதல் தின நிகழ்வு வைத்தியதிகாரி பணிமனையில்



உலக கைகழுவுதல் தினம் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்றது.

இதில் யாழ். மாநகரசபைக்குட்பட்ட உணவு கையாளும் தொழிலாளிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது அவர்களுக்கு கைகழுவுதால் ஏற்படும் நன்மைகள், கைகழுவும் முறை, தற்சுகாதாரம் பேணுவதன் அவசியம் பற்றி சுகாதார வைத்திய அதிகாரியினால் விளக்கம் அளிக்கப்பட்டு கைகழுவுதல் பற்றி செயன்முறை விளக்கங்களும் கொடுக்கப்பட்டன.

மேலும் உணவுச் சுகாதாரம், சுகாதாரமான உணவகங்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் பற்றி பொதுச் சுகாதார பரிசோதகர்களான யே.பேடினன்ஸ், ப.கிசோக்குமார் ஆகியோரால் விளக்கம் அளிக்கப்பட்டது. (இ

# புகைப்பட பயிற்சி நெறி ஆரம்ப வைபவம் இன்று

(கொழும்புத்துறை)

யாழ் இராகாஸ் வரம் இசை மன்றத்தின் ஏற்பாட்டில் புகைப்பட பயிற்சி நெறி ஆரம்ப வைபவம் இன்று சனிக்கிழமை கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது

இந்நிகழ்வில் பல்சமய ,சமாதான கருத்தாடல் நிலைய இணைப்பாளர் எஸ். வசந்த பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம் பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக அருட்தந்தை அன்ரன் மத்தாயத் அடிகள் கலந்து கொள்ளவுள்ளார். மேற்படி பயிற்சி நெறிக்கு 15 தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் பங்குபற்ற முடியும். (இ-51)

# துரையப்பா விளையாட்டரங்கு புனரமைப்பிற்காக கையளிப்பு

யாழ்.மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட துரைப்பா விளையாட்டரங்கானது நேற்று 17 ஆம் திகதி முதல் ஒன்பது மாதங்களுக்கு புனரமைப்பு வேலைகளுக்கான ஒப்பந்தகாரருக்கு தற்காலிகமாக கையளிக்கப்பட்டுள்ளது.

எனவே இக்குறிப்பிட்ட காலத்தில் இங்கு எவ்விதமான நிகழ்வுகளையும் நடத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது என்பதனை அறியத் தருகிறேன் என யாழ். மாநகரசபை ஆணையாளர் செ. பிரணவநாதன் அறிவித்துள்ளார். (இ

# முதியோர், மாற்றுவலுவுடையோர் தினத்தினை முன்னிட்டு போட்டிகள்

(கரணவாய்)

முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோர் தினத்தை முன்னிட்டு கரவெட்டி பிரதேச செயலகத்தினால் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ். சிவசிறி அறிவித்துள்ளார்.

இதில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் இணைந்து கொள்ள முடியும். இதற்கமைய வேகநடை, சங்கீதக்கதிரை போன்ற போட்டிகள் இடம் பெறவுள்ளன.

அத்துடன் மாற்று வலுவுடையவர்கள் மற்றும் செயற்கை கால் பொருத்தியவர்களுக்கான போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

எனவே இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் ஆர்வமுடையவர்கள் கரவெட்டி பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்கூட்டமைப்பின் புறக்கணிப்பை புதிய விடயமாகக் கருதவில்லை அரசு

## அமைச்சர் பசில் இறுமாப்பு



ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் வடக்குக்கான விஜயத்தையும், யாழ்தேவி புகையிரதம் மீண்டும் யாழ்ப் பாணத்திற்கு கொண்டுவரப் பட்ட நிகழ்வையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக் கணித்தமை குறித்து அரசு ஆச்சரியமடையவில்லை. காரணம் மக்களுக்குச் சேவை யாற்றாத அவர்கள் இவ்வாறு நடந்துகொள்வது புதிய விடய மல்ல. இவ்வாறு பொருளா தார அபிவிருத்தி அமைச்ச ரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப் பாளருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். யாழ் தேவி யாழ்ப்பாணம் வந்த நிகழ்வை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்ததாக நாங்கள் உணரவேயில்லை. காரணம் வடக்கு மக்கள் ஜனாதிபதி யையும் யாழ்தேவியையும் வரவேற்றனர். மக்களுக்காக மண்டும் யாழ்தேவியை வடக் குக்கு கொண்டு சென்றமை தொடர்பில் மகிழ்ச்சியடை கின்றோம். வடக்கு மாகாண மக்கள் தொடர்பில் ஜனா தபதிக்கு கரிசனை இருந்தால் மக்க ளால் தேர்ந்தெடுக கப்பட்ட பிரதிநிதிக ளுடன் கலந்தா லோசித்தே வடக்குக்கு அவர் வந் திருப்பார். அப்பொழுது நாங்கள் அவரை நன்றியுடன வரவேற்றிருப்போம் என்று வடக்கு மாகாண சபை முத லமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் தெரிவித்துள்ளமை குறித்து கேட்ட போது அமைச சர் பசில் ராஜபக்ஷ மேற்கண டவாறு தெரிவித்தார்.


இந்த விடயம் குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக் கையில்,

வடக்குக்கு மீண்டும் யாழ் தேவி புகையிரத சேவையை ஆரம்பிக்க கிடைத்தமை தொடர்பில் அரசு மகிழ்ச்சிய டைகின்றது. வடக்கு மக்க ளுக்கு அந்தப் போக்குவரத்து வசதியைப் பெற்றுக்கொடுத் தமை மிகப்பெரிய விடயமா கும். அதனை நிறைவேற்ற முடிந்தமை மிகப்பெரிய அடைவு மட்டமாகவே கருதப்படுகின் றது. இந்நிலையில், யாழ்தேவி வடக்குக்கு வந்த நிகழ்வை யும் ஜனாதிபதியின் வடக்குக் கான விடயத்தையும் புறக்க ணிப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூறியிருந்தது. ஆனால், கூட்டமைப்பு இந்த வரலாற்று நிகழ்வைப் புறக் கணித்ததாக அரசு உண ரவில்லை. காரணம் யாழ் தேவி புகையிரதத்தையும் ஜனாதிபதி மகந்த ராஜபக்ஷ வையும் வடக்கு மக்கள் அன்று மிகவும் சிறப்பாகவே வரவேற்றனர். புகையிரத நிலை யங்களிலும் புகை யிரத பாதையின் இரு மருங் கிலும் கூடியிருந்த மக்கள் ஜனாதிபதியையும் யாழ்தேவி யையும் ஆரவாரமாக வரவேற் றனர். அந்த மக்களின் முகங் களில் நாங்கள் மகிழ்ச்சியைப் பார்த்தோம். அது எங்களுக்குப பெரும் திருப்தியை ஏற்படுத் தியது. அன்று யாழ்தேவி புகை யிரதத்தை புலிகள் அழித்த னர். ஆனால், அதனை எமது ஜனாதிபதி தலைமையிலான அரசு மீண்டும் பெற்றுக் கொடுத்துள்ளது. நாங்கள் வட க்கு மக்களுக்குச் சேவை களைப் பெற்றுக்கொடுக்கின் றோம். அந்த மக்களின் தேவை களை நிறைவேற்றுகின் றோம். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவற்றைப் புறக்கணித்து வருகின்றனர் என்றார். (இ)

## மல்லாகத்தில் தொற்றா நோய் தடுப்பு சிகிச்சை முகாம் நேற்று

வடக்கு மாகாண ஆளுந ரின் வழிகாட்டலில் ஆளுநரது மூத்த பிரஜைகள் கழகம் - தெல்லிப்பழையில் அண் மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மூத்த பிரஜைகளது நலனை



மேம்படுத்துவதையும் அவர் களது உடல்உள ஆரோக்கியத் தைப் பேணுவதையும், இன் றைய இளம் சமூகத்தினருக்கு இவர்களது அறிவு, அனுபவம என்பவற்றைக் கொண்டு செல் வதையும் இதன்மூலமாக ஆரோ க்கியமான சமூகம் ஒன் றை உருவாக்குவதையும் நோக் காகக் கொண்டு ஸ்தாபிக் கப் பட்ட இக்கழகத்தின் முதல் கட் டமாக இக்கழகத்தின் அங் கத்தவர்களுக்கு அடை யாள அட்டை வழங்குவதற் காக கடந்த 7ஆம் திகதி புகைப் படம் எடுக்கப்பட்டது.

இவ்வடையாள அட்டைகளு உரித்துடைய மூத்த பிரஜைகளு அரச வளங்கள் சேவைகளின் போது நிச்சயமாக முன்னு ரிமை வழங்கப்படும் என ஆளுநர் உறுதியளித்துள் ளார்.

இரண்டாம் கட்டமாக இப் பிரஜைகளது உடல் ஆரோக் கியத்தை நோக்காக கொண்டு நேற்று முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் மண்டபத்தில் தொற்றா நோய் தடுப்பு சிகிச்சை முகாம் ஒன்று அமைக்கப்பட்டு அதில் கண், நீரிழிவு, இரத்த அழுத்தம் எனப் பலவற்றையும் பரிசோ தனை செய்து அவர்களுக்கு தொடர் சிகிச்சைப் புத்தகமும் வழங்கப்பட்டது. இதில் 100 இற் கும் மேற்பட்டவர்கள் சிகிச் சைக்காக வருகை தந்திருந் தனர். இதில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்டனர். மற்றும் ஆளு நர் அலுவ லகத்தைச் சேர்ந்த சரத் அரனியல், இணைப்புச் செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் இக்கழகத்தின் தலை வர் சி.விக்னராஜா, செயலா ளர்எ.சின்னத்தம்பி இவர்க ளுடன் கழக உறுப்பினர்க ளும் பங்குபற்றினர். மூதத பிர ஜைகளது நலன மேம்பாட் டிற்காக பல்வேறு நடவடிக் கைகள ஆளுநரால முன்னெ டுக்கப்படவுள்ளது. இவர்க ளுக்கான உள்ளக விளையாட்டு ஒழுங்குகள் (Chess, Carom, Dam, Table Tennis), தகவல தொடர் பாடலுக்கான பயிற்சி நெறிகள் (Inter net & e-mail) மற்றும் சுற்று லாக்கள் எனப் பலவும் ஒழுங்கு செய்யப்படவுள் ளன என இதன் இணைப் பாளர் எடுத்துக் கூறி னார். நீண்ட நேரமாக வைத்திய நிலையங்க ளில் வரிசையில் காத் திருந்து சிகிச்சை பெறும் அசௌகரியத்தை ஆளு நரால் ஒழுங்கு செய்யப் பட்ட இம் முகாம் குறைத் துள்ளது என்றும் இவ்வா றான முகாம்கள் தமக்கு மாதமொருமுறை அல் லது இரு மாதங்களிறகு ஒருமுறையாவது ஆளு நர் செயலகத்தால்ஒழுஙகு செய்து தரப்பட வேண் டும் எனவும் வருகை தந்த மூத்த பிரஜைகள் தெரிவித்தனர். (இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நேர்மையின் இருப்பிடம்
சேவையின் சிகரம் போற்றுவார்
போற்றட்டும் புழுதி வாரி தூற்
றுவார் தூற்றட்டும் என்று
தன்னலம் கருதாது எமது
பிரதேசத்திற்கும் மக்களுக்கும்
பெரும் சேவை ஆற்றிய
உயர். திரு. சுப்பையா
பரம்சோதி
அவர்களே! தங்கள் அளப்பரிய
சேவைக்காக சமூக சேவை
திணைக்களத்தினால் பாராட்டி தங்
களுக்கு விருது வழங்கியமைக்காக
நாங்களும் நன்றியுடன்
தங்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
வளர்க தங்கள் சேவை.



நண்பர்கள்

(1608)


## ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலுக்கு 5 புதிய உறுப்பு நாடுகள் தேர்வு

ஐக்கிய நாடுகள் சபை யின் பாதுகாப்பு கவுன்சிலுக் கான புதிய நிரந்தரமற்ற உறுப்பினர்களாக அங்கோலா, மலேஷியா, நியூசிலாந்து, வெனிசுலா மற்றும் ஸ்பெ யின் ஆகிய நாடுகள் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இருந்த உறுப்பு நாடுகள் ஆர்ஜென்டீனா, அவுஸ்திரேலியா, லக்சம்பர்க், தென் கொரியா மற்றும் ருவ ண்டா ஆகிய 5 நாடுகளின் பதவி காலம் முடிவடைந்ததை அடுத்து புதிய உறுப்பு நாடுக ளாக அங்கோலா, மலேஷியா, நியூசிலாந்து, வெனிசுலா மற் றும் ஸ்பெயின் தேர் தெடுக் கப்பட்டுள்ளது.

இந்த புதிய உறுப்பு நாடு களின் பதவி எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத் தில் இருந்து தொடங்கும். நிரந் தரமற்ற உறுப்பு நாடுகளுக் கான தேர்தலில், ஐ.நா. பொது சபையில் மொத்தம் உள்ள 193 உறுப்பினர்களில் 129 வாக்குகள் அல்லது மூன்றில் 2 பங்கு வாக்குகளைப் பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 22 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.A/ முகாமையாளர் (U.K NOTPR)<br>தொ.இ: B/1941 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 44 1/2செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/2712 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 72 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/1942 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 85 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSC/வங்கியாளர்<br>தொ.இ: G/2718 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 40 செவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/1944 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 34 1/4 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/2722 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 122 செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ நிகழ்ச்சி திட்ட உதவியாளர்<br>தொ.இ: B/1947 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 10 சூரி செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/2728 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை தமிழரின் உரிமைக்குரல் ஓயாது

## வேலாயுதம் எம்.பி.சுட்டிக்காட்டு

தங்கக்குவியல் உள்ளிட்ட சலுகைகளை வழங்கி, தமிழர்களின் உரிமைக்குரலை நசுக்கிவிடலாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தப்புக் கணக்குப் போடுகின்றார் என்று சாடியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தவிசாளரும், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வேலாயுதம், கௌரவமானதொரு அரசியல் தீர்வு கிடைக்கும்வரை தமிழர்களின் உரிமைக்குரல் ஓயாது ஓங்கி ஒலிக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் ஆட்சிபீடம் ஏறும் என்றும், அதன்பின்னர் தமிழ் மக்களின் வாழ்வில் நிச்சயம் விடிவு பிறக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் வேளையில், வடக்கு மாகாண மக்களின் வாக்குகளை குறிவைத்து அமைச்சர்கள் பட்டாளத்துடன் அங்குச் சென்று மக்களை வளைத்துப்போடும் முயற்சியில் ஜனாதிபதி நேரடியாக களமிறங்கினார். இதற்காக தங்கம் உட்பட பல பொருட்கள் வாரி இறைக்கப்பட்டன.

அத்தடன், கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன. இவைமட்டுமல்ல அரச ஊழியர்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட்டன. உரிமைகளை கேட்டும் தமிழர்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்களை வளைத்துப் போடுவதற்கான பொறியொன்றையே ஜனாதிபதி வைத்துள்ளார்.

ஆனால், இந்தப்பொறியில் தமிழர்கள் ஒருபோதும் சிக்கமாட்டார்கள். இதற்கு வடக்கு மாகாண சபைத் தேர்தல் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆகவே, குறுக்கு வழி முறைகளைப் பின்பற்றுவதை விடுத்தி, தமிழர்களுக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்து ஜனநாயக வழியில் தமிழர்களின் மனங்களை வெற்றிக் கொள்வதற்கு அரசு முயற்சிக்க வேண்டும்.

இதற்காக பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. ஜனாதிபதி நினைத்தால் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நாளையே பயனுள்ள வகையில் அமுல்படுத்திவிட முடியும். அப்போது தமிழர்களுக்கு தம்மைத் தாமே ஆளக்கூடிய ஓர் சூழ்நிலை உருவாகும்.

அதேவேளை, இந்த அரசுக்கு வடக்கு மாகாண சபையை விமர்சிப்பதற்கு எவ்வித அதிகாரமும் இல்லை. ஆதிகாரங்கள் யாவற்றையும் தனது கடடுப்பாட்டின் கீழ் வைததுக்கொண்டு, வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு கடிவாளம் போடும் ஜனாதிபதி அதை வைக கோல் பட்டடை நாய் என விமர்சிப்பது அர்த்தமற்றசெயலாகும்.

அத்துடன், விரைவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் மகிந்தவைத் தோற்கடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அனைத்துவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும். மாற்றமொன்றைக் காண்பதற்காகவே மக்களும் விருப்பத்துடன் காத்திருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# எஸ்.பிக்கு இடையூறு செய்த மாணவர்களுக்குப் பிணை

(கொழும்பு)

உயர் கல்வியமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க உட்பட பல அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்ட வைபவத்தை இடைமறித்து தடங்கல் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பலாங்கொடை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 12 மாணவர்களையும் தலா ஒரு இல்ட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு பலாங்கொடை நீதவான் லலித் கன்னங்கர நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவிகளுக்கான புதிய விடுதியைத் திறந்து வைப்பதற்காக உயர் கல்வியமைச்சர் அங்கு வந்தபோது அவரது வழியை இடைமறித்து இடைஞ்சல் செய்த மாணவர்களில் 12 பேரே இவ்வாறு பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (இ)

# அரச நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் சிங்களம், தமிழில் இருப்பது கட்டாயம்

சகல அரச நிறுவனங்களிலும் வைக்கப்பட்டுள்ள பெயர்ப்பலகைகளில் சிங்களம், தமிழ் ஆகிய இரு தேசிய மொழிகளிலும் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாத சமயத்தில் அரச நிறுவனங்களுக்கு எதிராக சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அலுவல்கள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அமைச்சின் ஆலோசனை நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, சட்ட நிபந்தனைகளுக்கு அப்பால் தேசிய மொழிகளான சிங்களத்துக்கும், தமிழுக்கும் சம அந்தஸ்து கொடுக்கவேண்டிய பொறுப்பு அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கு உள்ளது என்றும் வலியுறுத்தினார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 110 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 |
| தக்காளி | 80 | 70 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 50 |
| கோவா | 100 | 80 | 100 |
| கரட் | 100 | 100 | 120 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 70 |
| பாகற்காய் | 160 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 |
| பயற்றங்காய் | 140 | 140 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 140 |
| பீற்றூட் | 70 | 60 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 160 |
| போஞ்சி | 240 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30-35 |
| இராசவள்ளி | 140 | 100 | 150 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 167

ராகுலன் பாலா





யது யதுர்சன்




வருணன் வருன்




கிரியா மோகன்




டாறா குயின்




கல்பவன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கச்சி சந்தையினை நவீன முறையில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது



கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி சந்தையினை நவீன முறையில் அமைக்கும் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் இயக்கச்சி சந்தை வர்த்தகர்களின் கோரிக்கையினை ஏற்று குறித்த சந்தைக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் வர்த்தகர்களுடனும், அதிகாரிகளுடனும் இயக்கச்சி சந்தையினை நவீன முறையில் அமைப்பது குறித்து கலந்துரையாடியுள்ளார்.

இயக்கச்சி சந்தைப் பகுதிக்கு வெளியிடங்களில் இருந்து சுற்றுலா பயணிகளும் வந்து செல்கின்ற இடமாக காணப்படுவதனால் குறித்த சந்தையினை நவீன முறையில் அமைக்க வேண்டிய தேவை இருப்பதனால் அதனை பூர்த்தி செய்து தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரிடம் கோரிக்கை விடுத்தமைக்கு அமைவாக கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரபா கரன், பச்சிலைப்பள்ளி பிர தேச சபையின் செயலாளர் மகாதேவன், பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் இயக்கச்சி சந்தைக்கு நேரடியாக சென்ற பாராளுமன்ற உறுப்பினர் சந்தையினை நவீன முறையில் புனரமைப்பதற்குரிய நடவடிக்கையினை வர்த்தகர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி மேற்கொண்டுள்ளார். (இ)



யாழ்.இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு உயர்த்தும் கரங்கள் திட்டத்தின் கீழ் முள்ளியவளை அகதிகள் முகாமில் வாழும் 75 குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன. இதன் போது ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

### பேருந்து மீது கல்வீசித் தாக்குதல்

தனியார் பேருந்து ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்களால் கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து புதுக்குடியிருப்புவரை பாடசாலை ஆசிரியர்களை ஏற்றிச் செல்லுகின்ற தனியார் பேருந்து மீது நேற்று பிற்பகல் 2 மணியளவில் மூங்கிலாறுபகுதியில்வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்கள் மூன்று பேரினால் கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பேருந்துச்சாரதிதலையில்காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ)

## வவுனியாவில் மாகாண சபை ஏற்பாடு செய்த

# மக்கள் குறைநிவர்த்தி நடமாடும் சேவையில் திணைக்கள அதிகாரிகள் பங்குபற்றத் தடை

(குருமன்காடு)

வடமாகாண சபையின் ஏற்பாட்டில் வவுனியாவில் நடைபெறும் குறை நிவர்த்தி நடமாடும் சேவையில் வவுனியா மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் எவரும பங்குபற்றக்கூடாது என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் உத்தரவிட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்த நிகழ்வை வடமாகாண சபையும் வவுனியா மாவட்டச்செயலகமும் இணைந்து வவுனியா வடக்கு புளியங்குளம் இந்துக் கல்லூரியில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்தியது.

இந்த நிகழ்வுக்கு வவுனியா மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள அரச திணைகளங்களில் பணிபுரியும் எவரும்பங்குபற்றக்கூடாதுஎன்று வவுனியா மாவட்ட அரச அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இதனால் இந்த குறைகேள் நிவர்த்தி செய்யும் நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் உட்பட அரச திணைக்களங்களில் பணிபுரியும் எவரும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளாமையால் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர் என மேலும் தெரிய வந்துள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விகனேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களாக சிவசக்தி ஆனநதன், செல்வம் அடைக்கலநாதன், மாகாண அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, ப.சத்தியலிங்கம் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பல திணைக்கள உயர் அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-250)


# முயற்சியாண்மையாளர் பரிமாற்றக் கண்காட்சி

(குருமன்காடு)

மாகாணங்களுக்கிடையில் முயற்சியாண்மையாளர்களின் செயற்பாட்டை பரிமாற்றம் செய்யும் முகமாக மாபெரும் கண்காட்சி ஒன்று வவுனியா நகரசபை வளாகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது. வடக்கிலுள்ள முயறசியாண்மையாளர்களினால் ஒழுங்குசெய்யப்பட்டு ஐ.நாவின் யு.எஸ்.எயிட் (USAID) அமைப்பின் அனுசரணையுடன் வடக்கு மாகாணத்தின் சிறு முயற்சியாண்மையாளர் அபிவிருத்தியை மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. பல்வேறுபட்ட துறைகளை பிரதிநிதித்துவம் செய்யும் மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் கொள்முதல் செய்வோர், விநியோகம் செய்வோர் மற்றும் சேவை வழங்குநர்கள் இடையே பெறுமதியான தொடர்பு களைக் கட்டியெழுப்புதல் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இது இடம் பெற்றது. இதில் வட மாகாண, மத்திய மாகாண முயற்சியாண்மையாளர்களால் பல்வேறு வேலைப்பாடுகளை யுடைய உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (இ-250)





தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் இசெந்தூரனால் அண்மையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதனைப் படங்களில் காணலாம். (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

# யாழ்தேவி புகையிரதத்தில் முன்கூட்டியே ஆசனங்களை பதிவு செய்வதில் இடர்பாடு

### அரச ஊழியர்கள் சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

வவுனியா புகையிரத திணைக்களத்தில் அரச ஊழியர்கள்பிரயாணிகளின்ஆணைச்சீட்டு ஊடாக ஆசனங் களை முன்கூட்டியே பதிவு செய்வதில் இடர்பாடுகளை எதிர்நோக்குவதாக பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த சில தினங்களாக யாழ்தேவி புகையிரதம் யாழ்ப்பாணம் சென்று மீள கொழும்புக்கு சென்று வருகின்றது.

இந்நிலையில் வவுனியாவிலிருந்து கொழும்பு செல்வதற்காக சில அரச ஊழியர்கள் கடந்த சில தினங்களாக வவுனியா புகையிரத நிலையத்திற்கு சென்று பல தடவை (14,15,16) குறித்த பிரயாணிகள் ஆணைச்சீட்டு ஊடாக ஆசனப்பதிவு செய்து பயணிக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் குறித்த அரச ஊழியர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதாகவும் தெரிவித்தனர்.

பிரயாணிகளின் நலன் கருதி ஆணைச்சீட்டு ஊடாக பயணம் செய்யும் ஒழுங்கு விதிமுறைகளை, அறிவித்தல்களை தெளிவ்படுத்துமாறும் பிரயாண ஒழுங்கு நேர அட்டவணையை தெளிவுபடுத்தி உதவுமாறும் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (இ-250)

### கலாசார திருவிழா

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன்கண்டாவளை பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் கலாசார திருவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பரந்தன் பொது நோக்கு மண்டபத்தில் கண்டாவளை பிரதேச செயலர் தி.முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.(இ-282)

# முல்லைத்தீவில் உள்ள கிராமப்புற வீதிகளை புனரமைத்து தருமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கிராமப்புறங்களில் உள்ள வீதிகளை உடனடியாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளருமான எஸ்கன கருத்தை தெரிவித்தார்.


முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்கம் பல அபிவிருத்தத் திட்டங்களை முன்னெடுத்துள்ளமையை பாராட்டும் மக்கள், கிராமப் புறங்களில் காணப்படும் உள்வீதிகளையும் புனரமைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணீரூற்று, குமுழமுனை ஊடாக அளம்பில் செல்லும் சுமார் 20 கிலோ மீற்றர் வரையிலான வீதி, துணுக்காய், கந்தபுரம் வரையிலான வீதி, வன்னிவிளான் நட்டாங்கண்டல் வரையிலான வீதி, துணுக்காய் முதல நட்டாங்கண்டல் ஊடாக வவுனியா செல்லும் வீதி உள்ளிட்ட இன்னும் சில வீதிகளும் புனரமைக்கப்படவில்லை.

எனவே, இதனை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உலகிலேயே குளிரான பகுதி**


உலகிலேயே குளிரான பகுதி அண்டார்டிக்கா என்று தெரியும். ஆனால் அண்டார்டிக்காவில் எந்தப்பகுதி குளிரானது? கிழக்கு அண்டார்டிக்காவில் உள்ள பீடபூமிதான் உலகின் மிகக் குளிரான பகுதி என்று செயற்கைக் கோள் உதவியுடன் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இங்கு -93.2 டிகிரி செல்சியஸ் பதிவாகி உள்ளது. இதற்கு முன்பு அண்டார்டிக்காவில் இருந்த ரஷ்யாவின் ஆராய்ச்சி மையமான வோஸ்டாக் ஸ்டேஷன்தான் அதிகக் குளிரான பகுதியாக இருந்தது (-89.2 செல்சியஸ்)




# அட அப்படியா?

**மின்னஞ்சல்**

மின்னஞ்சல் முகவரியில் @ என்ற எழுத்தை ஏன் உபயோகிக்கிறோம் தெரியுமா? மின்னஞ்சல் முகவரிகள் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படுகின்றன. ஒன்று மின்னஞ்சலை உபயோகிப்பவரது பெயர் அடையாளம். மற்றொன்று அந்த மின்னஞ்சல் முகவரியை உருவாக்கிப் பயன்படுத்தி தருபவரது பெயர் அடையாளம். இந்த இரண்டையும் பிரிக்கப் பயன்படுவதே @ என்ற குறியீடு. உதாரணமாக gmail.com என்பது மின்னஞ்சல் முகவரியை உருவாக்கித் தருபவரின்அடையாளம். அதில் ஒருவரின் மின்னஞ்சல் முகவரி அமைந்துள்ளது. என்பதை @ (at the rate of) என்பதன் மூலம் அறிந்து கொள்கின்றோம்!



**ரெட் சிக்னல்**

ரஷ்யாவின் உக்ரைன் பகுதியில்தான் செர்னோபில் அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்து காரணமாக கடுமையான கதிர்வீச்சு ஏற்பட்டு அருகில் இருந்த காட்டுப் பகுதியைப் பதம் பார்த்தது. கதிர் வீச்சின் பாதிப்பால் பச்சை இலைகள் மெல்ல மெல்ல சிவப்பாக மாறிவிட்டன.

அந்தக்காட்டை சிவப்புக்காடு (red forest) என்றே அழைக்கிறார்கள். மனிதர்கள் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்ட இயற்கை எவ்வளவு ரெட் சிக்னல் போட்டாலும் அவர்கள் அதைக் கண்டு கொள்வதே இல்லை!



## 10.2014 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1356 - சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற நிலநடுக்கம் அதன் பேசல் நகரை முற்றாக அழித்தது.
- 1860 - இரண்டாவது ஓப்பியம் போர் முடிவுக்கு வந்தது.
- 1867 - ரஷ்யாவிடமிருந்து அலாஸ்கா மாநிலத்தை ஐக்கிய அமெரிக்கா 7.2 மில்லியன் அமெரிக்க டொலர் விலை கொடுத்து வாங்கியது. இந்நாள் அலாஸ்கா நாள் எனக் கொண்டாடப்படுகிறது.
- 1898 - ஐக்கிய அமெரிக்கா புவெர்ட்டோரிக்கோவைக் கைப்பற்றியது.
- 1908 - பெல்ஜியம் கொங்கோவைக் கைப்பற்றியது.
- 1912 - முதலாம் பால்க்கான் போர் ஆரம்பமாகியது.
- 1922 - பிபிசி வானொலி ஆரம்பிக்கப்பட்டது.
- 1929 - கனடாவில் பெண்களும் மனிதர்கள் என சட்டபூர்வமாக எழுதப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப்போர்:ஹிட்லரிடமிருந்து ஜேர்மன் தேசிய இராணுவத்தை அமைப்பதற்கான கட்டளை பிறந்தது.
- 1945 - வெனிசுவேலாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து அதன் அதிபர் பதவியிழந்தார்.
- 1851 - இங்கிலாந்தில் பளிங்கு அரண்மனையில் அனைத்துலக வர்த்தகக் கண்காட்சி முடிவுற்றது.
- 1954 - டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் முதலாவது டிரானசிஸ்டர் வானொலியை அறிமுகப்படுத்தியது.
- 1967 - சோவியத் விண்கலம் வெனேரா 4 வீனஸ் கோளை அடைந்தது. வேறொரு கோளின் வளிமண்டலத்தை அளந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1991 - அசர்பைஜான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்து விலகியது.
- 1991 - நாகப்பட்டினம் மாவட்டம் அமைக்கப்பட்டது.

பிறப்புகள்

- 1882 - பல்லடம் சஞ்சீவ ராவ் கர்நாடக இசை புல்லாங்குழல கலைஞர் (இ. 1962)
- 1910 - வி. நவரத்தினம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் (இ. 2006)
- 1956 - மார்டினா நவரதிலோவா, டெனிஸ் வீராங்கனை
- 1960 - ஜான் குளோட் வான் டாம், நடிகர்
- 1978 - ஜோதிகா, இந்தியத் திரைப்பட நடிகை

இறப்புகள்

- 1871 - சார்ள்ஸ் பபேஜ், ஆங்கிலேய கணிதவியலாளர் (பி. 1791)
- 1931 - தோமஸ் அல்வா எடிசன், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர் (பி. 1847)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




98

## அந்த நான்கு நிபந்தனைகள்!

....இதில் தேய்மானம் ஏற்பட்டாலோ அல்லது பாதிப்பு ஏற்பட்டாலோ அது மனிதனை முடக்கிப் போட்டு நடைபிணம் ஆக்கிவிடும். எனவே, சச்சினுக்கு முதுகுவலி என்றவுடன் ரசிகர்கள் மட்டுமன்றி மருத்துவத்துறையில் உள்ள பலரும் கவலைப்படத் துவங்கினர். சச்சின் நிகழ்த்தும் சாதனைகள் பல தலைமுறைகளுக்குப் பேசப்பட வேண்டும் என்று விரும்பிய பலர் சச்சினின் முதுகுவலி குறித்து நிஜமாகவே பயந்துவிட்டனர். சோறு தண்ணீர் இல்லாமல்கூட சச்சின் இருப்பார். ஆனால், கிரிக்கெட் ஆடாமல் சச்சினால் இருக்க முடியாது என்பது தெரிந்த விடயம்தான். ஆனாலும், முதுகுவலியைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு சிகிச்சை எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிட்டால் பிறகு ஆபரேஷன் என்ற நிலைக்கு தள்ளிவிடும். எனவே, வருமுன் காப்போன் ஆக இருப்பதுதான் சச்சினுக்கு நல்லது என அவருக்கு ஆலோசனை கூறினார்கள்.

உள்ளூரில் உள்ள மருத்துவர்களைச் சச்சின் சந்தித்தார். அறுவை சிகிச்சை இல்லாமல் முழுமையாக தீர்வு வேண்டுமானால் குறைந்தது பதினைந்து நாட்களாவது 24 மணி நேரமும் அங்கும் இங்கும் அசையாது கட்டாந்தரையில் படுத்து உறங்க வேண்டும் (மெத்தை கூடாது). பிறகு கொஞ்ச நாளைக்கு இடுப்பில் லம்பார் பெல்ட் அணிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் ஓரளவு நிவாரணம் கிடைக்கும் என்று கூறினார்கள். ஓய்வு என்ற வார்த்தையே சச்சினின் அகராதியில் இல்லை. ஓய்விற்கே ஓய்வு தரும் சச்சினால் ஓய்வு எடுப்பது என்பது இயலாத காரியம். எனவே, இடுப்பில் லம்பார் பெல்ட்டுடன் சச்சின் கொஞ்ச நாட்கள் விளையாடினார். உட்புறம் பெல்ட்டைக் கட்டிக்கொண்டு மேலே சட்டை அணிந்துகொண்ட போதும் ஒருசில சமயம் அந்த பெல்ட் வெளியே எட்டிப் பார்த்ததைப் பத்திரிகைகள் கண்டுபிடித்துவிட்டன. சச்சின் லம்பார் பெல்ட் அணிந்து கொண்டு விளையாடுகிறார் என்பது தலைப்புச் செய்தியாகிவிட்டது. சச்சின் என்ன செய்தாலும் அது செய்தித்தாள் என்பது மற்றொரு முறை நிரூபணம் ஆனது.



இந்தியா, மேற்கு இந்தியத் தீவுகள் மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான அடுத்த போட்டிகள் கனடா நாட்டில் டொரெண்டோ நகரில் நடைபெற்றன. இலங்கையில் இருந்து இந்திய அணி நேரடியாக கனடா சென்றது. ஆனால், சச்சின் மட்டும் தனது முதுகுவலிக்கு சிகிச்சை எடுத்துக் கொள்ள ஆஸ்திரேலியா சென்றார். அடிலைடில் உள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அகாதமியின் சிறப்பு டாக்டர் பீட்டர் பார்ன்ஸ் சச்சினுக்கு முழுமையான பரிசோதனைகளை நடத்தி அவருக்கு ஸ்பாண்டிலோசிஸ் உள்ளது என்று தெரிவித்தார். இந்தப் பிரச்சினை ஏற்கனவே சச்சினுக்கு இருந்து வந்துள்ளது. ஆனால், சென்னை போட்டியின் போதுதான் வலியின் வீச்சு வெளியே தெரியத் துவங்கியது என்றார். இதற்கு இடையே இங்கிலாந்தில் உள்ள பிரபல எலும்பு சிகிச்சை மருத்துவர் ஒருவரும் சச்சினுக்கு சிகிச்சை அளிக்க பரிந்துரைக்கப்பட்டார். ஆக, சச்சின் அடிலைட்டிற்கும் லண்டனுக்கும் சிகிச்சைக்காக பறந்துகொண்டிருந்தார்.

சச்சின் தனக்கு வந்த முதுகுவலியைக் கூடத் தாங்கிக்கொண்டார். ஆனால், அக்கறை என்ற பெயரில் ஆளாளுக்குத் துக்கம் விசாரிப்பது போல் உங்கள் முதுகுவலி எப்படி இருக்கிறது என்று கேட்ட கேள்வியைத்தான் சச்சினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஒவ்வொருவருக்கும் பதில்சொல்லிச் சொல்லி முதுகுவலியை விட வாய்தான் அதிகம் வலிக்க ஆரம்பித்துவிட்டது என்று அந்த வலியிலும் சச்சின் ஜோக் அடித்தார். இந்த உடல் இயந்திரம். ஓய்வில்லாமல் பதினொரு வருடங்களாக உழைத்துக் கொண்டிருக்கிறது.

> வாலு போச்சு கத்தி வந்தது என்ற பழமொழிக்கு ஏற்ப முதுகுவலிகொஞ்சம் குறைந்தது என்று சச்சின் மகிழந்த வேளையில் வேறு ஒரு ரூபத்தில் வேறு ஒரு வலி அவருடன் சரசமாட கதவைத் தட்டிக்கொண்டிருந்தது.

(தொடரும்)

**கே. ரமேஷ்**

---


# ஆத்ம ஞானத்தைத் தேடி

..அல்லது நான் ஏன் உங்களிடம் குறிப்பிட்ட விடயத்தைச் சொன்னேன் என்று நீங்களாகவே ஏதாவது கற்பனை செய்யத்தொடங்கி விடுகிறீர்கள்.

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

நான் ஒருவேளை வேறு யாரிடமாவது பேசிக்கொண்டிருந்திருக்கலாம். அல்லது உங்கள் அஹங்காரத்தைச் சற்று அமைதிப்படுத்துவதற்காக ஒருவேளை உங்களைப் பார்த்து சிரிக்காமல் இருந்திருக்கலாம். அவ்வளவுதான்! ஆனால், நீங்கள் என் செயல்களுக்கு உங்கள் அன்பைப் பற்றிய அகராதிப்படி விளக்கங்கள் கொடுத்து மொத்த விளையாட்டையுமே தவறவிட்டுவிடுகிறீர்கள், இதனால் என்ன நிகழும்? நீங்கள் ஆழந்த துன்பத்திற்கு ஆளாவீர்கள்.

இவ்வாறுதான் நீங்கள் அன்பை வெறுமனே சிக்கலாக்கி விடுகிறீர்கள். நான் சாதாரண அன்பிற்கு அப்பாற்பட்டிருப்பதால் குறைந்தபட்சம் என்னிடம் வரும் சமயத்திலாவது என் பக்கத்திலிருந்து எந்தவிதச் சிக்கல்களும் சேர்க்கப்படாமல் இருக்கிறது! உங்களில் இருவர் ஒருவருடன் ஒருவர் இந்த வகையில் உறவு கொண்டால் என்ன நிகழும் என்று கற்பனை செய்து பாருங்கள்? மொத்தமும் குழப்பமாகிவிடும். நீங்கள் வெறுமனே அன்பில் மேலும் கீழும், மேலும் கீழும் நகர்ந்து கொண்டிருப்பீர்கள், அவ்வளவே. உங்கள் உணர்ச்சிகளைப் பொறுத்த வரை, முக்கியமாக அன்பைப் பொறுத்த வரை



நீங்கள் ஒருவரை ஒருவர் மிகவும் சார்ந்திருக்கிறீர்கள். ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதற்கான காரணங்கள் மிகவும் நுட்பமாகவும் [illegible] இருப்பதால் உங்கள் அன்பு அவற்றை மீறும் வரை உங்களால் அதைத் தெரிந்து கொள்ள முடியாது. உங்களால் எந்த விதமான காரணமும் இல்லாமல் அன்பு செலுத்த முடியுமானால் அது தூய [illegible] அவ்வளவே. தூய அன்பு [illegible] சார்ந்திருக்கவில்லை. அது உங்களை மட்டுமே சார்ந்திருக்கிறது. இதில் மிகத் தெளிவாக இருங்கள்.

மக்கள் சொல்கிறார்கள், ஸ்வாமிஜி, நாங்கள் எங்கள் குழந்தைகளை நேசிக்கிறோம்... என்று.

அவர்களது குறும்புத்தனங்களைத் தாங்க முடியாமல் எத்தனை முறை நாம் அவர்களைத் திட்டியிருக்கிறோம்? ஆஸ்ரமத்தில் ஒரு பெண் என்னிடம் சொன்னாள், ஸ்வாமிஜி என் அன்னை என் குழந்தைகள் அவர்கள் சரியாக

**ஆன்மீகம் 48**

நடந்துகொண்டால்தான் நேசிக்கிறாள். அவள் தன் பேரக்குழந்தைகளைத் தன் சிநேகிதிகளுக்குக் காண்பிப்பதற்காக மட்டுமே நான் அழைத்து வர வேண்டும் என்று விரும்புகிறாள். இறுதியில் அவர்கள் பண்ணும் அமளி தாங்க முடியாமல் என்னைத் திட்டுகிறாள்! நீங்கள் குழந்தைகளைக் காணும் பொழுது அவர்களின் கள்ளம் கபடமற்ற தன்மையால் கவரப்படுகிறீர்கள் என்பது ஒரு விடயம். இரண்டாவது விடயம், அவர்கள் உங்களது படைப்புகள் என்று பார்க்கும் பொழுது அது உங்களுக்கு ஒரு பெருமை உணர்வையும் ஒரு அஹங்கார ஊக்கத்தையும் கொடுக்கிறது.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் போரிட பாக்.இராணுவம் தயார்

## முஷாரப் பேச்சால் சர்ச்சை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப், இந்தியாவுக்கு எதிராக கருத்து தெரிவித்துள்ளார்.

காஷ்மீரில் உள்ள மக்கள், இந்தியாவுக்கு எதிராக போராடி வருகிறார்கள். அவர்களை நாம் தூண்டிவிட வேண்டும். இந்தியாவுடன் போரிட பாகிஸ்தான் இராணுவம் தயாராக உள்ளது.

இலட்சக்கணக்கான பாகிஸ்தான் மக்கள், படையெடுத்துச் சென்று காஷ்மீருக்காக போரிட தயாராக உள்ளனர்.


எனவே, பாகிஸ்தான் திருப்பி அடிக்காது என்ற மமதையில் இந்தியா இருக்கக்கூடாது. ஒரு கன்னத்தில் அடித்தால், மறு கன்னத்தை காட்ட மாட்டோம். பதிலுக்கு பதில் எங்களால் கொடுக்க முடியும்.

நரேந்திர மோடி, பாகிஸ்தானுக்கு எதிரானவர். அவர் மாறவில்லை. நம்மிடம்தான் தவறு உள்ளது. அவரது பதவி ஏற்பு விழாவில் பங்கேற்க நாம் ஓடுகிறோம். நாம் நமது கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ)

உலக தரிசனம்

# போராட்டக்காரர்கள் மீது மிளகுப்பொடி வீசி தாக்கு



ஹொங்ஹொங்கில் முழுமையான ஜனநாயக உரிமைகளை வழங்க வேண்டும் என்று கேட்டு மாணவர்கள், பொதுமக்கள் இணைந்து முக்கிய வீதிகளை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த போராட்டக்காரர்கள் மீதுஅவ்வப்போதுபொலிஸார் நடத்தும் கண்ணீர்ப்புகை குண்டு வீச்சு, மிளகுப்பொடி வீச்சு நிலைமையை மேலும் மோசமாக்கி வருகிறது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் ஹொங்ஹொங் நகரின் தலைமை நிர்வாகி லீயுங் சுன் யிங் அலுவலகம் அருகேயுள்ள வீதியை போராட்டக்காரர்கள் பல்வேறு தடைகளை அமைத்து முற்றுகையிட்டு போராட்டம் நடத்த முயற்சித்தனர்.

அப்போது அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்த முற்பட்டனர். அதில் இரு தரப்பினர் இடையே கைகலப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மிளகுப்பொடி வீச்சு நடத்தினர். இதனால் அங்கு பதற்றம் நிலவியது.

இதற்கிடையே போராட்டத்தின் தீவிரத்தை குறைக்கும் வகையில், நகர நிர்வாகி லீயுங் சுன் யிங், போராட்டக்காரர்களுடன் அடுத்த வாரம் பேச்சு நடத்த முடியும் என தான் நம்புவதாக தெரிவித்தார். (இ)

# ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் அச்சுறுத்தல் தொடர்கிறது



ஈராக் தலைநகர் பக்தாதில்உள்ளபள்ளி மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து அங்கிருந்த தனது குழந்தைகளை மீட்டு வரும் தந்தை

ஈராக்கின் மொசூல் நகரில் ஆயிரக்கணக்கான மாணவர்களை பரீட்சைக்கு செல்ல அனுமதிக்காமல் ஐ.எஸ். ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் மிரட்டி வருகின்றனர். இதனால் மொசூல் நகரில் வசிக்கும் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள், சன்னி பிரிவுக்குஆதரவானதலைமை கொண்ட "காலி பத்" என்ற தனி இஸ்லாமிய நாடு அமைப்பதற்காக உள்நாட்டு போரில ஈடுபட்டு வருகின்றனர்.

ஈராக்கின்நினிவேமாகாணத்தின் தலைநகரமும் ஈராக்கின் மிகப் பெரிய நகரமுமான மொசூலை சுற்றி கிளர்ச்சியாளர்கள் பாதுகாப்பு வளையம் ஏற்படுத்தி, அங்கு உள்ள மக்கள் அனைவரும் இஸ்லாமிய கொள்கைகள் அடிப்படையிலேயே செயற்பட வேணடும் என்று கட்டளையிட்டு வருகின்றனர்.

பள்ளி மாணவர்களும் இஸ்லாமியக் கொள்கைகளை தழுவிய மறுசீரமைப்பு பாடத்திட்டத்தை ஏற்படுத்த அவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

இதன் அடிப்படையில் மொசூல் நகரில் இருக்கும் 6 முதல் 18 வயதுக்கு உட்பட்ட ஆயிரக்கணக்கான மாணவர்களை தேர்வு எழுதச் செல்ல அனுமதி மறுத்துள்ளது.

காலிபத்திலிருந்து வெளியேறி சென்று தேர்வு எழுத நினைத்து விதிகளை தகர்த்தால் மரண தண்டனை நிச்சயம் என்று ஐ.எஸ். ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து நினிவே மாகாண உயர் பாதுகாப்பு அதிகாரி இப்ராகிம் முகமத் அல் பயாத்தி கூறும்போது, "ஐ.எஸ்.ஐ.எஸ்.ஆதரவாளர்கள் இங்கு சுற்றிலும் மையங்களை ஏற்படுத்தி மாணவர்களை கண்காணித்து வருகின்றனர். இங்கிருந்து கிர்க்குக் என்ற இடத்துக்கு சென்றுதான் மாணவர்கள் தேர்வு எழுத வேண்டும். ஆனால், மாணவர்கள் செல்ல வாய்ப்பே இல்லாத நிலை உள்ளது" என்றார்.

கிளர்ச்சியாளர்களின் அச்சுறுத்தலால் மாணவர்கள் தங்களது பள்ளிக்கு செல்லாமல் எந்த மாகாணத்துக்கு சென்று தேர்வு எழுதினாலும், அவர்களது தேர்வு மதிபபிடப்படும் என்று ஈராக் கல்வித்துறை அறிவித்துள்ளது. ஆனால் அரசு அறிவித்தது போல அருகில் உள்ள பகுதிகளிலும் மாணவர்களால் சென்று தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்களின் கண்ணில் சிக்கிய மாணவர்கள் கடுமையான எச்சரிக்கையோடு நகருக்குள் திருப்பி அனுப்பப்பட்டனர். இதனை மீறி சென்றால், கைது செய்யப்பட்டு மரண தண்டனை வழங்கப்படும் என்று எச்சரிக்கை வருவதால் மாணவர்கள் அச்சத்திலுள்ளனர்.

இது குறித்து மொசூலை சேர்ந்த மாணவர் மைசூன் முகமது கூறுகையில், "கிளர்ச்சியாளர்கள் எங்களது கனவை நாசமாக்கின்றனர். ஏற்கனவே நாங்கள் தாக்குதல் சத்தத்துக்கு நடுவே பாடங்களை படித்து மன உளைச்சலில் உள்ளோம். எங்களது பள்ளி பருவம் பாழானது. கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து எங்களால் படிக்க முடியவில்லை. இப்போது படிக்க முடியும் என்ற நம்பிக்கையும் போனது" என்று கவலையுடன் தெரிவித்தார். (இ)

# எபோலா தாக்கிய தாதி விமானத்தில் பயணிப்பு

## அமெரிக்காவில் பரபரப்பு


மேற்கு ஆபிரிக்க நாடுகளில எபேர்லா வைரஸ் நோய ஆதிக்கம் செலுத்தி வருவது உலகையே கதிகலங்கவைதது வருகிறது. இதுவரை அங்கு இந்த நோய் தாக்கி சுமார் 4 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நோய் அமெரிக்காவல்ஏற்கனவேஒருதாதியை தாக்கியது. இப்போது இன்னொரு தாதியையும் தாக்கியுள்ளது. 29 வயதான இந்த தாதியின் பெயர் ஆம்பர் வின்சன். இவர் அங்கு கிளிவ்லேண்டிலிருந்து டல்லாசுக்கு விமானத்தில் பயணம் செய்ய சுகாதாரத்துறை அனுமதி அளித்தது. இதைத் தொடர்ந்து அவர் விமானம் மூலம் டல்லாஸ் போய் சேர்ந்தார். இது அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அவருக்கு காய்ச்சல் இருந்தாலும், விமானத்தில் வாந்தியெடுக்கவில்லை என்பதால் இந்த நோய் ஏனைய பயணிகளுக்கு தாக்கி இருக்கக் கூடிய வாய்ப்பு குறைவு என்று கூறப்படுகிறது.

இருப்பினும் அவரை விமானத்தில் பயணிக்க அனுமதித்திருக்கக் கூடாது என்ற கருத்து எழுந்துள்ளது. (இ)

# சவுதி பணிப்பெண்ணுக்கு 80,000 டொலர் நட்டஈடு



சவுதி அரேபியாவில் வீட்டுப் பணிப்பெண்ணாக வேலை செய்தபோது எஜமானால் இம்சிக்கப்பட்ட இந்தோனேசியப் பெண்ணுக்கு 80 ஆயிரம் டொலர்கள் என்ற பெருந்தொகை நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியப் பணிப்பெண்கள் சவுதி அரேபியாவில் இந்தோனேஷியப் பணிப்பெண்கள் பெரிய எண்ணிக்கையில் வேலை பார்த்துவருகின்றனர்.

அவர் அங்கு பணியாற்றிய 7 வருட காலத்தில் மீண்டும் மீண்டும் துன்புறுத்தப்பட்டதால், அவரது உடல் நிரந்தரமாக உருக்குலைந்து போயிருக்கிறது.

மக்காவில் உள்ள பள்ளிவாசலுக்கு அருகே அவர் அநாதையாக வீசப்பட்டு கிடந்தபோது அவர் கைது செய்யப்பட்டார்.

அதனையடுத்து ரியாத்தில் உள்ள இந்தோனேசிய தூதரகத்துக்கு அவரைப் பற்றிய தகவல்கள் தெரியவந்துள்ளன.

அவரது முன்னாள் எஜமானருக்கு எதிராக வழக்கை தொடுப்பதற்கு இந்தோனேசிய தூதரகம் முயற்சித்தது.

ஆனால், இந்த விவகாரம் தற்போது நீதிமன்றத்துக்கு வெளியே தீர்க்கப்பட்டுள்ளது. (இ)

# பனிச் சரிவில் சிக்கி 30 பேர் பலியாகினர்

(காத்மண்டு)

நேபாளத்தின் இமயமலையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட பனிச் சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30-ஆக உயர்ந்துள்ளது.

இந்த பனிச் சரிவால் உயிரிழந்த இரு இந்தியர்கள் இரு கனடா நாட்டினரின் உடல்கள் வியாழக்கிழமை மீட்கப்பட்டன.



அந்நாட்டின் மனாங் மாவட்டத்திலுள்ள தோரங்கணவாய் அருகே இந்த நான்கு பேரின் உடல்களும் கண்டெடுக்கப்பட்டன.

மேலும், மஸ்தாங் மாவட்டத்தில் மேலும் நான்கு உடல்கள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இந்த பனிச் சரிவில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 30 ஆகவும், உயிரிழந்த இந்தியர்களின் எண்ணிக்கை 3 ஆகவும் அதிகரித்துள்ளன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்-23

## உயிர்ப்படல உயிர்ப்பசளைகள்: நுண்ணங்கிகளின் வேருடனான ஒன்றிய வாழ்வு தொழில்நுட்பம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பயிர்ச்செய்கையில் அசேதன இரசாயனப் பசளைகளை தவிர்த்து எதுவுமாகாது என்ற நிலைக்குள் நாமும் எமது விவசாய பெருமக்களும் வந்திருக்கின்ற நிலையில் இயன்றவரை அசேதன இரசாயனப் பசளைகளை தவிர்ப்பதற்கான வழிமுறைகளை விஞ்ஞான உலகம் ஆராயத்தொடங்கியிருக்கின்றது. இதற்கான வழிமுறைகள் கடினமாக இருந்தாலும் தாவரமொன்றின் வேர்த்தொகுதியில் இருக்கும் நுண்ணங்கிகளின் எண்ணிக்கை மற்றும் தன்மை பற்றி சிறிதளவேனும் நாம் தெரிந்து வைத்திருத்தல் நன்று. வழக்கமாக எம்மினிய உறவுகளான விவசாய பெருமக்களை நோக்கி இச்செய்திகள் எழுதப்பட்டாலும் தற்போது உள்வாங்கப்படும் தொழில்நுட்ப கற்கைநெறியில் கல்விகற்கும் மாணவர்கள் நுண்ணங்கிகளின் பயன்பாடு பற்றி அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டியதென்ப தாலும், இதனையே பிற்காலத்தில் தொழிற்றுறையாக மாற்றக்கூடிய வாய்ப்பு இருப்பதாலும் நுண்ணங்கிகளின் உலகம் பற்றிய அண்மைக்கால விடயங்களை அவற்றினது ஆற்றலை இங்கே தொகுத்து தரப்பட்டுள்ளன.

நுண்ணங்கிகளின் பயன்பாடு விசாலமானதும் விசித்திரமானதுமாகும். நன்மைதரும் நுண்ணங்கிகளும் அதனுடன் சேர்ந்து நோயை உருவாக்கும் நுண்ணங்கிகளும் எமது சூழற்தொகுதியில் நிறைவாகவே இருக்கின்றன. இவற்றைப் பிரித்தறிவதென்பது இலகுவானதாக இருக்காது. ஆய்வு கூடத்தின் உதவியின்றி இது சாத்தியமாகாது. இவ்வாறான நுண்ணங்கிகளின் இயல்புகளை தாவரத்தின் வேர்களுடன் ஒன்றிய வாழ்வு வாழும் போது கண்டறியப்படுவது மேலும் அந்த நன்மைதரும் நுண்ணங்கிகளை முழுமையாக பயன்படுத்த ஏதுவாக இருக்கும். இவ்வகை ஆய்வுகளை கண்டியில




மைந்துள்ள அடிப்படைகற்கைகள் நிறுவனத்தில் பணிபுரியும் ஆய்வாளர்களினால் பல ஆண்டுகளாக

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XV**

மேற்கொள்ளப்பட்டு பங்கசுக்கள் மற்றும் பக்ரீறியாக்களின் தாவர வேர்களுடனான ஒன்றிய வாழ்வு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தாவரத்தின் வேர்களிலுள்ள வேர்மயிர்கள் ஒருவகை சுரப்பை சுரக்கின்ற போது நன்மைதரும் நுண்ணங்கிகள் அந்த வேர்ச்சுரப்பை நாடி வேர்த்தொகுதிக்கு மேலாக செறிவாக்கப்பட்டுவிடும். இந்த நுண்ணங்கிகளின் செறிவாக்கல் தாவர வேரிலிருந்து சுரக்கப்படும் சுரப்பின் தன்மையிலும் அளவிலும் தங்கியிருக்கும். தாவரம் கம்பீரமாக வளரும் போது வேர்ச்சுரப்புக்களின் அளவும் அதிகரிக்கும். இதனை நுண்ணங்கிகள் வசதியான வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு எண்ணிக்கையில் பெருகும். ஆக மொத்தத்தில் தாவர வேரைச்சுற்றி காப்பரணாக இருப்பதோடு மட்டுமல்லாது தாவரத்தின் வேர்த்தொகுதிக்கு தேவையான வகையில் சுற்றியிருக்கின்ற பெரிய மூலக்கூறுகளை சிறியவையாக மாற்றி தாவரவேர் அகத்துறிஞ்சுவதற்கும வழிசெய்து கொடுக்கின்றன.

மாறாக உயிர்ப்படல உயிர்ப்பசளைகள் [Biofilm Biofertilizer] எனப்படுவது தாவரவேர்களுடன் ஒன்றியவாழ்வு வாழுகின்ற பக்ரீறியாக்களையும் பங்கசுக்களையும் உள்ளடக்கிய கூட்டுத்தொகுதியாகும். இந்நுண்ணங்கிகள் ஒருங்கிணைந்து தாவரத்திற்கு அதனது வேர்த்தொகுதியினூடாக தேவையான ஊட்டச்சத்துகளை கொடுக்கும் வல்லமை கொண்டவையாகும். இவ்வாறான கட்டமைப்பினை தாவ்ரவேருக்கு செயற்கையாக வளர்த்து வேர்த்தொகுதிக்கு இடும் போது தாவரம் தேவையான ஊட்டச்சத்தினை இயல்பாகவே பெற்றுக் கொள்ளும் நிலைக்கு உள்ளாகின்றது. இதனை அடிப்படையாக வைத்து உயிர்ப்படலம் என்னும் நுண்ணங்கிகளின் கூட்டுத்தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

மருத்துவத்துறையில் உயிர்ப்படலம் [Biofilm] ஒரு தீமை தருகின்ற நுண்ணங்கி கூட்டுத்தொகுதியாக கணிக்கப்பட்டுள்ளது. மனிதனுக்கு தீங்கிழைக்கும் நுண்ணங்கிகள் இந்த உயிர்ப்படலத்தை தமது உயிர்ப்பிற்கு பயன்படுத்திக்கொள்கின்றன. மாறாக தாவரவேர்களைப் பொறுத்தவரை இவை நன்மைதருகின்ற அனுகூலமான நுண்ணங்கி கூட்டமைப்பாகவே காணப்படுகின்றன. விவசாய செய்கையில் அசேதன பசளைகளின் பயன்பாட்டை குறைப்பதற்கும் உயிர்ப்பசளைகளை அதிகளவில் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பினை ஏற்படுத்துகின்றன. தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட ஆய்வுகளில் தேயிலைச்செடி சிறப்பாக வளருவதற்கு இந்த உயிர்ப்படல உயிர்ப்பசளைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றினது பயன்பாட்டினை மற்றைய பயிர்களுக்கும் பயனுள்ளதாக விரிவாக்க வேண்டும். இதற்கான ஆய்வுகள் முடுக்கி விடப்படுகின்ற நிலையில் இன்னும் நுண்ணங்கிகளினது பயன்பாடு அதிகரிக்கப்பட்டு சேதன முறை விவசாயத்தை முன்னெடுக்க வழிகிடைக்கும்.

தொழிற்றுறைகள் விருத்தியடைய ஆரம்பிக்கும் நிலையில் சேதனமுறை பயிர்ச் செய்கைக்கு அவசியம் முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். அதன்மூலமாக தான் உற்பத்தியாகின்ற பொருட்களை உலகசந்தைக்கு எடுத்துச் செல்ல வழிகிடைக்கும். உலக சந்தைக்கு எமது உற்பத்திப் பொருட்கள் செல்வதாயின் தரமானதாக சேதன முறைமூலம் உற்பத்தியானவையாக அவசியம் இருக்க வேண்டும். தரம் குறைந்தால் உலக சந்தையை எந்தப்பொருளும் எட்டிப் பார்க்கவும் முடியாது மற்றைய பொருட்களுடன் போட்டி போடவும் முடியாது.

சேதன பயிர்ச்செய்கைக்கு உரஞ்சேர்க்கும் உயரிய தொழில்நுட்பமாக இதனை கருதலாம். அத்துடன் இந்த வகை தொழில்நுட்பம் சூழலுக்கியைவானதும் பரந்துபட்ட அளவில் பயன்படக் கூடியதுமாகும்.

# கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ஜனாதிபதி செயலகத்திற்கு தபாலட்டை

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, ஜனாதிபதி செயலகத்திற்கு ஒரு இலட்சம் தபாலட்டைகளை அனுப்பும் போராட்டமொன்றை நடத்தவுள்ளதாக முற்போக்கு தமிழ்த்தேசிய கட்சியின் செயலாளர் எஸ்.விஜயகாந்த் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை கோரி எமது கட்சியால் மேற்கொள்ளப்படும் மூன்றாவது போராட்டம் இதுவாகும். முன்னதாக கவனயீர்ப்பு போராட்டம் மற்றும்உண்ணாவிரத போராட்டம்ஆகியவற்றை மேற்கொண்டிருந்தோம்.

தற்போது, தபாலட்டை அனுப்பும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். இந்த தபாலட்டை அனுப்பும போராட்டத்தில் கலந்து. கொள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவற்றிற்கும் அழைப்பு விடுகின்றோம்.

நாங்கள் முன்னெடுத்த போராடடங்கள் தொடர்பில் ஜனாதிபதி அலட்சியமாக இருந்து வருகின்றார்.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டிருந்த போது, சலுகைகள் தொடர்பிலான விடயங்களிலே அக்கறை செலுத்தியிருந்தார். கட்டடங்கள், அலுவலகங்கள் திறப்பதிலேயே அவர் கவனம் செலுத்தினார்

மாறாக மக்களின் பிரச்சினைகள, மீள்குடியேற்றம் மற்றும் அரசியல் கைதிகள் விடுதலைகள் தொடர்பான விடயங்களில் அவர் அக்கறை செலுத்தவில்லையென அவர் மேலும தெரிவித்தார். (இ)

# இந்திய இராணுவத் தளபதி இலங்கைக்கு விஜயம்!



(கொழும்பு)

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் தால்பீர் சிங் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதி ஜெனரல் தால்பீர் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

அடுத்த ஆண்டில் தால்பீர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் அண்டை நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயங்களின் ஓர் கட்டமாக தால்பீர் இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார். (இ)

# இரு சகோதரர்களுக்கு மரண தண்டனைத்தீர்ப்பு

சகோதரியின் கணவனை கொலை செய்த இருவருக்கு மரண தண்டனை வழங்கி கேகாலை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மாவனெல்ல கொண்டதெனிய என்ற இடத்தில், தங்கையின் கணவரை கொலை செய்த இருவரை குற்றவாளிகளாக இனங்கண்ட நிலையில் மரண தண்டனை விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

50 மற்றும் 52 வயதுடைய சகோதரர்களுக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு மாவனெல்ல கொண்டதெனிய என்ற இடத்தில் இடம்பெற்ற வாக்கு வாதத்தின் போது குறித்த நபர், கொலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# 16 வயது மாணவி குத்திக் கொலை

(கொழும்பு)

கல்கமுவ கிரிபாவே எனுமிடத்தில் நேற்று முன்தினம் 16 வயது மாணவி கூரிய ஆயுதத்தால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாணவியின் கொலையுடன் தொடர்புடையதாக கூறப்படும் 24 வயதுடைய சந்தேக நபர் மரத்திலிருந்து கீழே விழுந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


சந்தேக நபர் மரமொன்றில் ஏறி தற்கொலை செய்து கொள்வதற்கு முயன்றபோதே, மரத்தின் கிளை முறிந்து கீழே விழுந்துள்ளார். இதனையடுத்து சந்தேக நபரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமான செயற்பாடுகளுக்கு கிடைத்த அங்கீகாரம்-2014 அமைதிக்கான நோபல் பரிசு

2014 ஆண்டுக்காக அறிவிக்கப்பட்ட நோபல் பரிசு, உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் மீதான அடக்குமுறைகளை எதிர்த்தும், சிறுவர்களுக்கான கல்வி உரிமையை வலியுறுத்தியும் குரல் கொடுத்து வந்த இருவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் ஒருவர் பாகிஸ்தானிய பெண் மலாலா. இவருக்கு வயது 17 மாத்திரமே. மற்றையவர் இந்தியாவைச் சேர்ந்த கைலாஷ் சத்தியார்த்தி. இவருடைய வயது 60.

இதில் ஒருவர் முஸ்லிம். மற்றையவர் இந்து. யூசப்சை மலாலா பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்கு குடியிருப்புப் பகுதிகளில் பெண் சிறார்கள் பள்ளிக்கு செல்வதற்கும் கல்வி கற்பதற்கும் தலிபான்களால் விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து போராடியவர். இதனால் 2012 அக்டோபரில் தான் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த தருணம் ஒன்றில் தலிபான்களால் நேரடியாக சுடப்பட்டு உயிர் தப்பியவர். 2012 இல் டைம்ஸ் சஞ்சிகையால் நடத்தப்பட்ட இந்த வருடத்திற்கான நபர் யார் எனும் வாக்கெடுப்பில் இரண்டாம் இடத்தைப் பிடித்தார். பின்னர் உலகை அதிகம் ஈர்த்த 100 நபர்களில் ஒருவராக தெரிவானார். தற்போது தன்து 17 வயதில் அமைதிக்கான நோபல் பரிசை வென்றுள்ளார். உலகில் மிக இளவயதில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முதலாவது நபரும் மலாலாதான்.





சத்தியார்த்தி இந்தியா சார்பில் நோபல் பரிசு பெற்ற ஐந்தாவது நபர் ஆவார். முன்னதாக ரவீந்திரநாத் தாகூர், சி.வி.ராமன், அன்னை தெரேசா, அமர்த்தியா சென் ஆகியோர் நோபல் பரிசு வென்றிருந்தனர். அதோடு சத்தியார்த்தி அமைதிக்கான நோபல் பரிசு பெறும் இரண்டாவது இந்தியர் ஆவார். அன்னை தெரேசாவுக்கு முன்னர் கிடைத்திருந்தது.

ஆனால், இவர்கள் ஐவரிலும் சத்தியார்த்திக்கு உள்ள பெருமை என்னவென்றால் இந்தியாவின் எல்லைக்குள்ளேயே பிறந்து வளர்ந்து அங்கேயே தற்போது வசித்து வரும் நபர்களில் நோபல் பரிசு வென்ற முதல் நபர் இவர்தான். சத்தியார்த்தி இந்தியாவில் சிறார்களின் உரிமைகளுக்காக மிக நீண்ட காலமாக போராடி வருகிறார். குறிப்பாக குழந்தை தொழிலாளர்கள் விடயங்களில் அவரது அக்கறை அதிகமாக உள்ளது. புது டெல்லியை மையமாக கொண்ட அவரது தொண்டு நிறுவனமான Bachpan Bacjp Andolan சிறார் தொழிலாளர்கள், சிறார் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள், சிறார் அடிமைகளாக இருப்பவர்களை மீட்டு வருகிறது. தனக்கு நோபல் பரிசு கிடைக்கப்பட்டதை அடுத்து சி.என்.என். தொலைக்காட்சிக்கு அவர் வழங்கிய செவ்வியில், இவ்விருது இந்தியாவுக்கானது, சிறார் அடிமைகளாக இருப்பவர்கள், சிறார் தொழிலாளர்களாக இருப்பவர்கள், சிறார் கடத்தலால் பாதிக்கப்படுபவர்கள் என இன்னமும் துன்பத்தில் வாடும் அனைத்து சிறுவர்களுக்குமாக இவ்விருதை அர்ப்பணிக்கிறேன் எனக் கூறியிருந்தார்.

நோபல் பரிசுக் கமிட்டிக் குழு இவ்விருதை அறிவித்த போது இவ்வாறு குறிப்பிட்டிருந்தது. ஒரு இந்து- ஒரு முஸ்லிம், ஒரு இந்தியன்- ஒரு பாகிஸ்தானியன் என இவர்கள் இருவரும் ஒரே குரலில் சிறார்களின் கல்வி உரிமை சிறார்களுக்கு மீதான கடும் போக்குவாதத்திற்கு எதிராக குரல் கொடுத்தவர்கள். இவர்களுக்கு பல்வேறு தனிநபர்களும் பல்வேறு அமைப்புக்களும் இணைந்து பங்களிப்பு செலுத்தி வருகின்றன.

தற்போது உலகம் முழுவதும் 168 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். 2000 ஆம் ஆண்டு 78 மில்லியன் அதிகமாக இருந்தது. தற்போது இந்த எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்திருப்பதே, குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிராக இந்த உலகம் ஒன்றாக குரல் கொடுத்து தனது இலக்கை நெருங்கத் தொடங்கியிருப்பதற்கான அறிகுறி என தெரிவித்திருந்தது.

யூசப்சை மலாலா தனது 16 ஆவது பிறந்த தினத்தில் ஐ.நாவில் உரையாற்றிய சிறப்பு உரையின் போது ஒரு குழந்தை, ஒரு ஆசிரியர், ஒரு புத்தகம், ஒரு பேனா இந்த உலகை மாற்ற முடியும் எனக்கூறியிருந்தார்.

ஐ.நாவின் நவம்பர் 10 ஆம் திகதி மலாலா தினம் அறிவிக்கப்பட்டிருந்தது. உலகம் முழுவதும் 50,000 பெண் சிறார்கள் கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டு உள்ளதாக பிரித்தானியாவின் முன்னாள் பிரதமரும் கல்விக்கான ஐ.நாவின் சிறப்புத் தூதுவருமான பிராவுண் தெரிவித்துள்ளார்.

மலாலா தற்போது தனக்கு வழங்கப்படவுள்ள நோபல் பரிசு விழாவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரிப்பும் ஒன்றாக இணைந்து கலந்துகொள்ளவேண்டும். இந்தியா- பாகிஸ்தானுக்கு இடையே நல்லுறவு நீடிப்பதற்கான பிரதிபலிப்பாக இது இருக்க வேண் டும் எனக் கூறியுள்ளார்.

கைலாஸ் சத்தியார்த்தி 1990 களிலிருந்து சிறுவர்களை தொழிலாளர்களாக பணிப்பதை எதிர்த்து போராடி வருகிறார். இவரது பச்பன் பச்சாவ் அந்தோலன் இதுவரை 80,000 இற்கு மேற்பட்ட சிறுவர்களை பல்வேறு வகை சேவைப் பணிகளிலிருந்து தடுத்து அவர்களது மீள் வாழ்வு மீளிணைப்பு மற்றும் கல்விக்கு வழி வகுத்துள்ளது.

இத்தாலியின் செனட் பதக்கம், ஐக்கிய அமெரிக்காவின் விடுதலை விருது, தி ஆக்னா சர்வதேச அமைதிக்கான விருது, நெதர்லாந்தின் தங்கக் கொடி விருது என பல உயரிய கௌரவ விருதுகளை வென்றிருந்த சத்தியார்த்தி அமெரிக்காவின் நவீன அடிமை முறை ஒழிக்கும் நாயகர் பட்டியலிலும் இடம்பெற்றிருந்தார்.

இவரது பணி இந்தியாவில் மாத்திரமல்ல. முழு தெற்காசியாவுக்கும் விரிவடைந்திருந்தது. தெற்காசியாவில் சிறுவர் தொழிலாளர்களை ஈடுபடுத்தாது கம்பளங்கள் தயாரிக்கும் நிறுவனங்களை தனித்து அடையாளம் காட்டி அவற்றின் உற்பத்திப் பொருட்களை மாத்திரம் உலகம் முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்ய வேண்டும் எனும் இவர் மேற்கொண்ட பிரசாரத்தின் பயனாகவும் அதற்காக இவர் கொண்டு வந்த ரக்மார்க் எனும் சுயச் சான்றிதழ் முறையும் உலகளாவிய ரீதியில் பாரிய தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களின் சந்தை வீதத்தை மாற்றி அமைத்தது. இவர் அறிமுகப்படுத்திய இந்த புதிய முறை தற்போது குட் வீவ் மாற்றம் பெற்றுள்ளது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இத்தகைய சான்றிதழ் கொண்ட கம்பளங்களையே வாங்க 1980 களிலும் 1990 களிலும இவர் அதிக பரப்புரை மேற்கொண்டார். இதன் மூலம் சிறார் தொழிலாளர்களைக் கொண்டு தமது உற்பத்திப் பொருட்களை பெருக்கும் தெற்காசிய நிறுவனங்களின் பொருட்கள் அதிகமாக சந்தைப்படுத்துவதில் வீழ்ச்சி ஏற்பட்டது.

பிரபல கார்டியன் இணையத்தளம், தனது திரைப்பட படைப்பாய்வகத்தைக் கொண்டு உருவாக்கிய Modern-day slavery in Assam ஆவணத் திரைப்படம், அசாமில் உள்ள உலகப் புகழ்பெற்ற tetley tea தேயிலை உற்பத்தி நிறுவனத்தின் விளைச்சல் நிலங்களில் பணிபுரியும் சிறார்களை விடுவிக்கவும் இளம் பருவ வயதில் காணாமல் போகும் பெண்பிள்ளைகளை மீட்டு அவர்களுடைய பெற்றோர்களுடன் இணைக்க சத்தியார்த்தியும் அவரது ஏனைய சகாக்களும் எடுக்கும் ஆபத்தான முயற்சியும் பற்றியும் எடுத்துரைக்கிறது.

இந்த ஆவணத் திரைப்படத்தில் ஒரு கட்டத்தில், சத்தியார்த்தி தனது அனுபவ பகிர்வின் போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குழந்தைகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பங்களில் எனது கால்கள் முறிக்கப்பட்டு எனது தலை உடைக்கப்பட்டு எனது தோல் மூட்டுகள் சுருக்கப்பட்டு அனைத்து ஆபத்துக்களையும் எதிர்கொண்டிருக்கிறேன். எனது இரு நண்பர்களை இழந்திருக்கிறேன். ஒருவர் தலையில் சுடப்பட்டும், மற்றையவர் சாகும் வரை அடித்தும் கொல்லப்பட்டனர். ஆகையால் இது இலகுவான நடவடிக்கை அல்ல. இது ஒரு நீண்ட போராட்டம் என்பது எனக்குத் தெரியும். ஆனால், அடிமைத் தனத்தை ஏற்றுக்கொள்ளவே முடியாது. அது மனிதாபி மானத்திற்கு எதிரான குற்றமாகும். எனது சொந்த நாட்டில் உள்ள எந்தவொரு தனிச் சிறாரின் சுதந்திரமும் பறிக்கப்படுவதை பார்த்துக்கொண்டு என்னால் பொறுமையாக இருக்க முடியாது.

தனது 34 வருட போராட்டத்தில் 10,000 இற்கும் அதிகமான இளம் இந்தியர்களை, அவர்களில் சிலர் ஐந்து ஆறு வயதில் முகவர்களால் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களை சத்தியார்த்தி மீட்டெடுத்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் விடிஷாவில் பிறந்து வளர்ந்த சத்தியார்த்தி அரச கல்லூரியில் மின் பொறியியல் படித்தவர். 1980 ஆம் ஆண்டு பச்பன் பச்சோ அண்டோலன் நிறுவனத்தை ஸ்தாபித்தார். 1990 இல் நடைபெற்ற global march against child labour எனும் மாபெரும் கவனயீர்ப்பு பிரசார நிகழ்வின் பிரதான ஒழுங்கமைப்பாளராக இருந்து உலகம் முழுவதும் நவீன அடிமைகளாக சிக்கியிருக்கும் மில்லியன் கணக்கான சிறார் பணியாளர்களுக்காக குரல் கொடுத்தார். அண்மையில் அவரது முழுவீச்சாக அவர் தொடங்கியுள்ள புதிய செயல் திட்டம், கட்டாயத் திருமணம் செய்து வைத்து அதன் பின்னர் அடிமைகளாக பாலியல் தொழில் வரை சீரழியும் இளம் பருவ பெண்களை கண்டுபிடித்து மீட்டெடுத்து அவர்களுக்கு மீள் நிவாரணம் வழங்குவதாகும்.

அமைதிக்கான நோபல் பரிசு பெற்றுள்ள சத்தியார்த்தி எப்போதும் கூறிவரும் வாக்கியம் இது: இந்தியாவில் பல நூற்றுக்கணக்கான பிரச்சினைகள் உள்ளன. ஆனால், மில்லியன் கணக்கான தீர்வுகள் உள்ளன.

யூசப்சை மலாலாவுக்கும் அவரது 17 வயதில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. தன்னை ஒரு வேளை தலிபான்கள் சுடுவதற்கு வந்தால், அவர்களிடம் பேசும் சந்தர்ப்பமாக அதை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்களது குழந்தைகளின் கல்வி உரிமைக்காகவும் சேர்த்தே தான் குரல் கொடுப்புதை அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் எனக் கூறியவர் மலாலா.

எனக்கும் பாகிஸ்தானில் இருந்த போது ஜஸ்டின் பீபர் போன்றவர்களின் மேற்கத்தேய பாடல்கள் பிடிக்கும். ஆனால், எப்போது பாகிஸ்தானை விட்டு வெளியேறி ஐரோப்பிய நாடொன்றுக்கு வந்தேனோ அன்றிலிருந்து எனது பாரம்பரிய உள்ளூர் இசையின் மகிமையை நன்கு உணர்கிறேன். இப்போதெல்லாம் விரும்பிக்கேட்பது அந்த இசைதான். இதுபோல் தான் கல்வியும். கல்வி கற்பதற்கான உரிமையும் சந்தர்ப்பமும் இலகுவாக உங்களுக்கு கிடைத்துவிடும். இதனால் சிலவேளைகளில் உங்களுக்கு புத்தகப்பை சுமையாக இருக்கலாம். ஆசிரியர்களின் கற்பித்தல் முறையும், கற்றல் பாடங்களும் சுமையாக இருக்கலாம். ஸ்வாட் பள்ளத்தாக்கில் தலிபான்களின் படையெடுப்பின் முன்னர் எமக்கும் அப்படித்தான் இருந்தது. ஆனால், எப்போது கல்வி உரிமை பறிக்கப்படத் தொடங்கியதோ அன்று அதன் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கினோம். ஒரு பாகிஸ்தானிய சிறுவன், சிறுமி இளவயதில் கல்வி கற்பது தலிபான்களுக்கு எவ்வளவு ஆபத்தானது என புரிந்துகொண்டோம். ஆம், கல்வியின் ஆற்றல் குறித்து அவர்கள் பயப்படுகிறார்கள். அதுவும் பெண்கள் கல்வி கற்றால் எவ்வாறான ஆற்றல் பெறுவார்கள் என நினைத்து மிகவும் பயப்படுகிறார்கள். எனக்கு சிறுவயதில் மருத்துவராகவே விருப்பம் கொண்டிருந்தேன். ஆனால், மருத்துவர் ஒரு சிறு சமூகத்திற்கோ நன்மை பயக்க முடியும். ஒரு அரசியல்வாதி ஒரு நாட்டுக்கே நன்மை பயக்க முடியும் என்பதை உணர்கிறேன்.

எனது கனவுகள் தற்போது மேலும் உயர்வடைந்துள்ளது. பாகிஸ்தானின் பிரதமராக வேண்டும் என்றும் ஆசைப்படுகிறேன். பெருந்தொகை அரச நிதியை கல்விக்காக செலவிட வேண்டும். தலிபான்களால் எனது உடலை சுட்டுவீழ்த்த முடியும். எனது கனவுகளை சுட்டுவீழ்த்த முடியாது. நான் செல்ல வேண்டிய தூரம் இன்னமும் நிறைய உண்டு. உலகின் எந்தவொரு சிறுவனும் சிறுமியும் கல்வி கற்கும் உரிமை கிடைக்கும் வரை இப்பயணம் தொடரும் என ஒரு வருடத்திற்கு முன்னர் சி.என்.என். தொலைக்காட்சிக்கு வழங்கிய நேரடிச் செவ்வி ஒன்றில் மலாலா கூறியிருப்பார்.

2014 ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு யூசப்சை மலாலா, கைலாஷ் சத்தியார்த்தி ஆகிய இருவருக்கும் கிடைத்துள்ளது. நிச்சயம் அவர்கள் இருவரினமும் மனிதாபிமான செயற்பாடுகளுக்கு கிடைத்த அங்கீகாரமே, இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளுமே இணைந்து மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டிய தருணம் இது.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினைவாதத்திற்கு தமிழரைத்தள்ளிவிடும்



## வெளிநாட்டவர்கள் வடக்குக்கு செல்வதற்கு விதிக்கப்பட்ட தடைகுறித்து ஜே.வி.பி.தெரிவிப்பு

வடக்கு செல்லும் வெளிநாட்டவர்கள் பாதுகாப்பு அமைச்சில் பதிய வேண்டுமென்ற அரசின் அறிவிப்பானது தமிழ் மக்களை மேலும் பிரிவினைவாதத்திற்கு தள்ளி விடும் செயற்பாடாகும் எனத் தெரிவிக்கும் ஜே.வி.பி. நாட்டில் சர்வாதிகார பொலிஸ் ஆட்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஜனநாயக சுதந்திரமான நாடு என்றால் இங்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு எங்கும் சுதந்திரமாக நடமாடும் உரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால், அதற்கு தடை விதிக்கப்படுகிறது.

விசேடமாக வடக்கிற்கு வெளிநாட்டவர்கள் செல்ல வேண்டுமென்றால் பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது நியாயமற்ற அதேவேளை வடக்கையும் தமிழ் மக்களையும் ஒதுக்கும் செயலாகும்.

அரசின் இவ்வாறான தன்னிச்சையான முடிவுகளால் நாட்டுக்கு எதிராக சர்வதேச அழுத்தங்கள், குற்றச்சாட்டுக்கள் அதிகரிக்கும். ஏற்கனவே மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

உல்லாச பிரயாணத்துறையை அபிவிருத்தி செய்யவும் வெளிநாட்டவர்கள் இங்கு வருவதை ஊக்குவிக்கவும் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக அரசு கூறுகின்றது. ஆனால் வடக்கிற்கு வெளிநாட்டவர்கள் செல்வதற்கு பதிவு செய்ய வேண்டுமென்கிறது. அப்படியானால் அரசின் உண்மையான கொள்கைதான் என்ன?

அரசிடம் கொள்கை எதுவும் இல்லை. மாறாக ஆட்சியதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள எதனையும் செய்யலாம் என்ற கொள்கையையே கடைப்பிடிக்கின்றது. அத்தோடு நாட்டை சர்வாதிகார பொலிஸ் ஆட்சியை நோக்கி நகர்த்தி வருகின்றது என்றும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ)

# கம்பஹாவில் எயிட்ஸ் தீவிரம்

கம்பஹா மாவட்டத்தில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை துரிதகதியில் அதிகரித்துச் செல்வதாக தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி எயிட்ஸ் நோயாளிகள் அதிகமாகவுள்ள மாவட்டம் கொழும்பாக இருந்தது.


எனினும், இந்நோய் துரித கதியில் அதிகரித்துச் செல்லும் கம்பஹா மாவட்டம் விரைவில் கொழும்புக்குச் சமனாகக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் கொழும்பில் 44 எயிட்ஸ் நோயாளிகளும் கம்பஹாவில் 42 நோயாளிகளும் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இந்த வருடத்தில் கடந்த ஆறு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி இலங்கையில் 110 எயிட்ஸ் நோயாளிகள் உள்ளனர் எனவும் அவர்களுள் அதிக எண்ணிக்கையானோர் 30 பேர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என எயிட்ஸ் ஒழிப்புப் பிரிவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

# கடந்தகால செயற்பாடுகளை நினைத்து வெட்கப்படுகிறேன்

## முன்னாள் பிரதம நீதியரசர்



(கொழும்பு)

கடந்தகால செயற்பாடுகளை நினைத்து வெட்கப்படுவதாக நாட்டின் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். அண்மையில் கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் தெரிவித்தார். ஜே.வி.பி. கட்சியினால் இந்த கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சாதாரண குடிமகனாக அன்றாட தேவைகளுக்கான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நான் நாரஹேன்பிட்டி பொது சந்தைக்கே செல்வேன். பிரதம நீதியரசராக கடமையாற்றிய காலத்திலும் பையை எடுத்துச் சென்று பொருட்களை கொள்வனவு செய்வது எனது வழக்கமாகும். அனுரகுமார திஸாநாயக்கவே, இவ்வாறு அண்மையில் நான் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக கடைக்குச் சென்றிருந்தேன். உங்களது கட்சியைச் சேர்ந்த எனது நண்பர் ஒருவர், என் முதுகில் தட்டி அழைத்தார். சேர் நீங்களே இந்தப் பிரச்சினைக்கு பொறுப்பு சொல்ல வேண்டும் என்றார். நான்தானே இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கின்றேன் என அவரிடம் குறிப்பிட்டேன். சேர் நீங்கள் இன்று சட்ட தர்க்கங்களை முன்வைக்கின்றீர்கள், உங்களுக்கு அதிகாரம் இருந்த காலத்தில், ஒரு வசனத் தொடரில் அந்த நபரை (ஜனாதிபதியை) இறுக்கியிருந்தால் இந்த நாட்டுக்கு எவ்வளவு சேவை செய்த நபராக வரலாற்றில் இடம்பிடித்திருப்பீர்கள் என்றார். உண்மையில் நான் அந்த கூற்றினால் வெட்கப்பட்டேன் என முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார். மூன்றாம் தவணைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியாது என்பதனை தெளிவுபடுத்தும் நோக்கில் ஜே.வி.பி.யினால் நடத்தப்பட்டு வரும் கருத்தரங்கில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தரங்கில் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவும் பங்கேற்றிருந்தார்.

வடக்கு ,கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு ஜே.வி.பி தாக்கல் செய்த மனுவிற்கு ஆதரவாக சரத் என் சில்வா தீர்ப்பளித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கதவுகளைத் திறந்துவிடுங்கள்!

ஒருத்தன் கூட நாம் சண்டை போடுகிறோம். அதில் நாமே வெற்றி பெறுவதாகவே வைத்துக்கொள்வோம். நாம் வெற்றி பெற்றால் அது நமக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். ஆனாலும் உள்ளுக்குள் ஒரு பயமும் உண்டாகலாம். ''தோற்றுப்போனவன் சும்மா இருப்பானா? பழி வாங்குவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டு இருக்க மாட்டானா?'' என்று மனம் எண்ணும். எனவே... வெற்றியின் ஒருபக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும் இன்னொருபுறம் அச்சமாக இருக்கும். ஒருமன்னன் இருந்தான். ஏராளமான போர்க்களங்களைக்கண்டவன்.

எத்தனையோ மன்னர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்தவன். அதன்காரணமாகவே ஒரு பயம் அவனுக்குள் உண்டாயிற்று. பகை மன்னர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து படையெடுத்து வந்துவிட்டால் என்ன செய்வது? அவன் நடுங்க ஆரம்பித்தான். அமைச்சர்கள் இதைக் கவனித்தார்கள். '' ஏன் ஒரு மாதிரியாக இருக்கீங்க?'' என்று கேட்டார்கள். மன்னன் தன் பயத்துக்கான காரணத்தைச் சொன்னான். '' ஏற்கனவே நம்மிடம் தோற்றவர்கள் இப்போது மறுபடியும் ஒன்று சேர்ந்து திரண்டு வந்தால் என்ன செய்வது?''

அமைச்சரவை கூடியது அரசன் அவர்களைக் கலந்து ஆலோசித்தான். அதன்படி ஒரு திட்டம் தீட்டப்பட்டது. உடனே பெரிய மாளிகை ஒன்றைப் புதிதாகக் கட்டினார்கள் மிகவும் பாதுகாப்பான மாளிகை இதற்கு ஜன்னல்கள் எதுவும் கிடையாது உள்ளே போகவும் வெளியே வரவும் ஒரே ஒரு சிறிய கதவு மட்டுமே உண்டு.

அதைத்தவிர அந்த மாளிகையில் வேறு எந்த வழியும் கிடையாது சின்ன துவாரம் தெரிந்தால் கூட அதைச் சுத்தமாக அடைத்து விட்டார்கள்.

அந்த ஒரே ஒரு சிறு கதவைப்பாதுகாப்பதற்கும் ஏராளமான வீரர்கள் காவலுக்கு நிறுத்திவைக்கப்பட்டார்கள் இவ்வளவும் செய்து முடித்த பின்னர் தான் அந்த மன்னனுக்கு மனம் நிம்மதியடைந்தது. ஒருநாள் மன்னனும் அமைச்சரும் அந்தச் சிறு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்கள்.

"என்ன அமைச்சரே...எப்படி நம்ம ஏற்பாடு?'' என்றார் மன்னர் அட்டகாசமாகச்சிரித்துக்கொண்டு. '' ஆகா... அற்புதம்!'' என்றார் அமைச்சர். அவர் வேறு எப்படிச்சொல்ல முடியும்? அங்கே வீதி ஓரமாக ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். மன்னர் சிரித்ததும் பேசியதும் அவர் காதில் விழுந்தது அவரும் சிரித்துவிட்டார். அவர் சிரித்ததைப்பார்த்ததும் மன்னருக்குக்கோபம் வந்து விட்டது. "எதுக்காகச் சிரிச்சே...?'' என்று கேட்டார். பெரியவர் சொன்னார் '' ரொம்பவும் புத்திசாலித்தனமாகத்தான் இந்த மாளிகையை கட்டியிருக்கீங்க... ரொம்ப பாதுகாப்பாத்தான் இருக்கு இருந்தாலும் ஒரு குறை தெரியுது...''

'' என்ன குறை?''

"வேற வழியே வைக்காம மாளிகையை கட்டின நீங்க என்னத்துக்காக ஒரே ஒரு வழியை மட்டும் வச்சிருக்கீங்க அந்த வழியா எதிரிகள் நுழைஞ்சுட்டா என்ன பண்ணுவீங்க?''

"என்ன பண்ணுறது?''

'' அதையும் ஒரு கருங்கல் சுவர் எழுப்பி அடைச்சுடுங்க. அதுதான் நல்லது அதுக்கப்புறம் எதிரிகளைப்பற்றிய பயம் கொஞ்சம் கூட இல்லாமல் நீங்க உள்ளே உட்காந்துக்கலாம் அதுதான் ரொம்ப பத்திரம்''

மன்னன் யோசித்தான்.

பளிச்சென்று ஒரு யோசனை..

'' அது சரி.. நீ சொல்ற மாதிரி அந்த ஒரு வழியையும் அடைச்சிட்டா அந்த மாளிகை ஒரு கல்லறை மாதிரி ஆயிடுமே...?''

'' இப்ப மட்டும் இது எப்படி இருக்கு கல்லறை மாதிரித்தானே இருக்கு?'' என்றார் பெரியவர்.

அவர் மேலும் சொன்னார்.

'' எதிரி வந்து உங்களைச்சாகடிக்கவில்லை என்றாலும் நீங்களாக ஒருநாள் சாகத்தானே போறீங்க..?''

மன்னன் சிந்திக்க ஆரம்பித்தான்.

இதன்போது பெரியவர் சொன்னார்.

'' உங்க மாளிகையில் எவ்வளவு கதவுகளும் ஜன்னல்களும் இருக்கோ... அந்த அளவுக்கு வெளி உலகத்தோட உங்களுக்குத் தொடர்பு இருக்கும். அந்த அளவுக்கு உங்க வாழ்க்கையிலே ஓர்இயக்கம் இருக்கும் கதவுகளை மூட மூட உங்கள் வாழ்க்கையும் அடைபட்டுப்போகிறது!''

மன்னன் மரியாதையோடு பெரியவரைக் கவனித்தான்.

அவர் தொடர்ந்து பேசினார்...''நான் கூட ஒருகாலத்தில் மாளிகையிலேதான் இருந்தேன் அதன் சுவர்களை எவ்வளவுதான் தள்ளிப்போட்டாலும் என் வாழ்க்கைக்குஅவை எல்லைக்'கோடுகளாக இருப்பதை நான் உணர்ந்தேன் வாழ்வுக்கு எல்லையே இருக்கக்கூடாதுஎன்று நினைத்தேன் இப்படி வந்து விட்டேன் இப்போது என் வாழ்வுக்கு வானம் தான் கூரை இந்த நிலம் தான் என் மாளிகை இப்போதுதான் வாழ்க்கையை முழுமையாக என்னால் உணர முடிகிறது அனுபவிக்க முடிகிறது.''

அரசன் அந்தப்பெரியவரின் காலில் விழுந்தான்.

அவனுக்கு வாழ்க்கையின் தத்துவம் புரிய ஆரம்பித்தது.

அடுத்த நாளே... தன் மாளிகைக்கு ஆயிரக்கணக்கான ஜன்னல்களையும் கதவுகளையும் வைக்கும்படி உத்தரவு போட்டான்.

இது தான் வாழ்வின் இரகசியம். கதவுகளை திறந்து விடுங்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# புதிய கட்சி ஆரம்பிப்பதற்கு நீதிமன்றம் கடும் நிபந்தனை விதிக்க ஆலோசனை

நாட்டில் ரவுடிகள், தகுதியற்றவர்கள் அரசியல் கட்சிகள் தொடங்குவதைத் தடுக்க, குறைந்த பட்சம் 10 ஆயிரம் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கடும் நிபந்தனைகளை விதிக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் யோசனை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பதில் மனு தாக்கல் செய்ய இந்திய தேர்தல் ஆணையத்துக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

புதுக்கோட்டை நகராட்சித் தலைவர் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் பாலகிருஷ்ணன் என்பவரை போட்டியிடவிடாமல் தடுத்து, லஞ்சம் வழங்க முயன்றதாக தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர் மற்றும் அ.தி.மு.க வினர் மீது வழக்கு பதிவு செய்ய பொலிஸாருக்கு உத்தர விடக்கோரி தேசிய மக்கள் சக்தியின் மாநில அமைப்புச் செயலர் எம்.கருணாகரன், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு ஏற்கனவே விசாரணைக்கு வந்தபோது, மனுதாரரின் தேசிய மக்கள் சக்தி தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட கட்சி என்பதற்கான ஆதாரங்களை தாக்கல் செய்ய நீதிபதி உத்தர விட்டிருந்தார்.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதி என்.கிருபாகரன் முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் சில ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அப்போது, யார் வேண்டுமானாலும் கட்சி தொடங்கும் நிலை உள்ளது. ரவுடிகளும் கட்சி தொடங்குகின்றனர். கட்சிகளைத் தொடங்கி அதிகாரிகளை மிரட்டுகின்றனர். கொடியை கட்டிக் கொண்டு காரில் வருவர். அவர்களுக்கு பொலிஸார் சல்யூட் அடிப்பார்கள். இந்த செயலை அனுமதிக்க முடியாது. கட்சி தொடங்குவதற்கு குறைந்த பட்சம் 10 ஆயிரம் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கடுமையான நிபந்தனைகளை விதிக்க வேண்டும் என்றார்.

கூடுதல் சட்டத்தரணி ஜெனரல் கே.செல்லப்பாண்டின் வாதிடுகையில், தேர்தலில் குறிப்பிட்ட சதவீதம் வாக்குகள் பெற்றால் மட்டுமே கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் அங்கீகாரம் வழங்கும் என்றார்.

இதையடுத்து, இந்த வழக்கில் இந்திய தேர்தல் ஆணையத்தை எதிர்மனுதாரராக சேர்த்த நீதிபதி, புதிய கட்சிகள் பதிவு செய்வதற்கான வழிமுறைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட கட்சிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்து ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி பதில் மனு தாகல் செய்ய இந்திய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டார். (இ)

# சென்னையில் தனக்கு அச்சுறுத்தலுள்ளதாக சுப்பிரமணியன் சுவாமி நீதிமன்றில் வாதம்

(சென்னை)

தமிழகத்தில் தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக, உச்ச நீதிமன்றத்தில் ஜெயலலிதா பிணை வழக்கில் பா.ஜ.க மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி வாதிட்டார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு இடைக்கால பிணை வழங்கி உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சுப்பிரமணியன் சுவாமி மனுவில், ஜெயலலிதா வருமானத்துக்கு அதிகமாக சொத்துக் குவித்தது தொடர்பாக நான்தான் முதன் முதலாக வழக்கு தொடுத்தேன். எனவே எனது கருத்தை கேட்ட பின்பே அவருக்கு பிணை வழங்குவது குறித்து முடிவெடுக்க வேண்டும் எனக் தெரிவித்தார்.

மேலும், உச்ச நீதிமன்றத்தில் அவர் நேற்று முன்வைத்த வாதத்தில், சொத்துக் குவிப்பு வழக்கில் முதன்முதலாக வழக்கு தொடுத்தவர் என்பதை கருத்தில் கொணடு நீதிமன்றம் அ.தி.மு.க.வினர் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

ஜெயலலிதாவுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதிலிருந்து அ.தி.மு.க.வினர் தமிழகத்தில் வன் முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கர்நாடக நீதிமன்றத்தையும், தீர்ப்பு வழங்கிய நீதிபதியையும் அவமதித்து வருகின்றனர்.

கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி கன்னடர் என்பதாலேயே ஜெயலலிதாவுக்கு பிணை வழங்க மறுத்ததாகவும் அவதூறு பரப்புகின்றனர். நான், சென்னைக்கு சென்றால் எனக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. ஜெயலலிதா, அவரது கட்சித் தொண்டர்கள் சட்ட விரோத செயல்களில் ஈடுபடக் கூடாது என அதிகாரப்பூர்வ அறிக்கை விடுத்தால் மட்டுமே வன்முறைகள் முடிவுக்கு வரும். இதை நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

சுவாமியின் வாதத்ந்த ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், அ.தி.மு.க தொண்டர்கள் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தக் கூடாது என ஜெயலலிதா வலியுறுதத வேண்டும் என உத்தரவிட்டனர். அதற்கு பதிலளித்த நீதிபதி நாரிமன், அ.தி.மு.கவினர் வன் முறையில் ஈடுப டக்கூடாது என ஜெயலலிதாவே அறிக்கை வெளியிடுவார் என உறுதியளித்தார். (இ)

# தமிழ்நாடு முழுவதிலும் காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்.

## ஞானதேசிகன் அறிவிப்பு

மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் அரசு நம் நாட்டிலுள்ள கிராமப்புறங்களில் வீட்டுக்கு ஒருவருக்கு 100 நாட்கள் வேலை என்கின்ற அற்புதமான திட்டத்தை மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரால் நடத்தி வந்தது. பல இலட்சம் வீடுகளில் வேலை வாய்ப்பை இந்த திட்டம் உருவாக்கிக் கொடுத்தது. வேலை வாய்ப்பை பெற்றவர்களின் பெரும்பான்மையினர் பெண்கள். மொத்த பயனாளிகளில் பாதி பேர் ஆதிவாசிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இதனால் கிராமப்புறங்களின் வளர்ச்சி மேன்மையடைந்தது.

குறிப்பாக தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த மக்கள் பெருமளவு பயனடைந்தனர். ஆனால், தற்போது மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு இத்திட்டத்தை முடக்கி வைக்க முயல்கிறது என்ற செய்தி கவலை தருகிறது: இத்திட்டத்திற்கான சம்பளம் நிறுத்தப்படுகிறது. தாமதித்து சம்பளம் கொடுக்கப்படுகிறது. தாமதித்து தரப்படுகிற சம்பளத்திற்கு நட்ட ஈடு தருவது அவசியம் என்பதும் நீக்கப்படுகிறது என்கிற தகவல் வருகிறது.


தேவைக்கேற்ப வேலை என்கிற தத்துவத்தை சீரழிக்கும் விதமாக இந்த திட்டத்தில் மாநில அரசின் செலவினங்களில் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. இதைவிட ஆபத்தான விடயம் இந்தியாவில் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள 200 மாவட்டங்களில் மட்டுமே இந்த திட்டத்தை அமுல்படுத்த முயற்சி செய்வதாக தெரிகிறது. ஆகவே பாரதீய ஜனதா அரசின் இந்த முயற்சியை எதிர்த்து கிராமப்புற மக்கள், குறிப்பாக ஆதிவாசி மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை பாதிக்கின்ற இந்த செயலுக்கு எதிராக தமிழகம் முழுவதும் காங்கிரஸ் கட்சி சார்பில் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் வட்டார அளவில் முதல் கட்டமாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

இந்த வேலைவாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமே தவிர, வேலை இழக்கின்ற முயற்சியில் மோடி அரசு முயலுமேயானால் காங்கிரஸ் கட்சி வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது என தமிழ்நாடு காங்கிரஸ கட்சித் தலைவர் ஞானதேசிகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ)




# பாடசாலை சுவர் இடிந்து வீழ்ந்ததில் 5வயது சிறுவன் உடல் நசுங்கிப்பலி!

## 25 பேருக்கு படுகாயம்



(நொய்டா)

டில்லியையடுத்த நொய்டா செக்டரில் உள்ள ஒரு பாடசாலையில நேற்றுமுன்தினம்40 மாணவ, மாணவிகள் பாடம் படித்துக்கொண்டு இருந்தனர். அப்போது அருகில் புதிதாக கட்டப்பட்டு இருந்த சுவர் ஒன்று திடீரென இடிந்து மாணவர்கள் மீது விழுந்தது.

உடனே அலறி அடித்துக்கொண்டு அனைவரும் பாடசாலையை விட்டு வெளியே ஓடி வந்தனர். இதில் 5 வயது மாணவன் ஒருவன் உயிரிழந்தான். 25 மாணவர்கள் படுகாயம் அடைந்தனர். இதில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் அவர்கள் டில்லி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். மேலும் 2 ஆசிரியர்களும் காயம் அடைந்தனர்.

இந்த விபத்தில் காயம் அடைந்த அனைவரும் 5 முதல் 10 வயதுக்கு உட்பட்டவர்கள். சம்பவம் தொடர்பாக கட்டட உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

# 15 வயதுச் சிறுவன் எரித்துக் கொலை; சாதிக் கொடுமைகள் தொடர்கின்றன

(பிஹார்)

இந்தியாவின் வட மாநிலமான பிஹாரின் ரோஹ்தாஸ் மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட சமூகமான மஹாதலித் சமூகத்தை சேர்ந்த சாய் ராம் என்ற 15 வயது சிறுவன் மீது, மேல் சாதி நபர் மண்ணெண்ணெய் ஊற்றி தீவைத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தீக்காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அந்த சிறுவன் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழுந்துள்ளார்.

இந்த தகவலை உறுதி செய்துள்ள ரோதாஸ் மாவட்ட உயர் பொலிஸ் அதிகாரி சந்தன் குஷ்வஹா, சம்பவம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள குல்குல் சிங் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பொலிஸ் புகாரின்படி கடந்த புதன்கிழமை பிற்பகல் மோகன்பூர் கிராமத்தில் அந்த சிறுவன் ஆட்டு மந்தை மேய்த்து கொண்டிருந்த நேரத்தில், சிறிது நேரம் அந்த இடத்தை விட்டு அகன்றிருந்தார்.

அந்த சமயத்தில் அவருடைய மந்தையில் உள்ள ஒரு ஆடு தவறுதலாக அருகிலிருந்த வயலில் சென்று மேயத் தொடங்கியுள்ளது.

வயலுக்கு சொந்தக்காரரான, அக்கிராமத்தின் ராஜபுத்திர என்ற மேல்சாதியை சேர்ந்த குல்குல் சிங் என்பவர், கோபமடைந்து அந்த சிறுவனை விரட்டி சாதியைச் சொல்லி அவதூறான வார்த்தைகளால் திட்டி, வயலுக்கு அருகே வைத்து அடித்துள்ளார்.

அதுமட்டுமல்லாது சிறுவனின் வீட்டிற்கு சென்று அவர் மீது மண்ணெண்ணெய் ஊற்றி குல்குல் சிங் தீவைத்துள்ளார்.

தீவைக்கப்பட்ட சிறுவனை பெற்றோர் மீட்டெடுத்து வைத்தியசாலையில் சேர்த்தனர்.

பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு 5 இலட்சம் இழப்பீடு வழங்க மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விரைவாக விசாரணை நடத்த வேண்டும் என்று அம்மாநில பொலிஸாருக்கு பிஹார் முதலமைச்சர் ஜித்தன் ராம் மஞ்சி உத்தரவிட்டுள்ளார். (இ)

# திருப்பதியில் இஸ்ரோ தலைவர் வழிபாடு



இந்தியாவின் அதிநவீன செயற்கை கோள் ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1சி, பி.எஸ்.எல்.வி.-சி26 ரொக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. அதையொட்டி இஸ்ரோ தலைவர் கே.ராதாகிருஷ்ணன், நேற்றுமுன்தினம் காலை திருமலைக்கு வந்தார். அவர், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார். அவருக்கு லட்டு, தீர்த்தப்பிரசாதம் ஆகியவற்றை தேவஸ்தான அதிகாரிகள் வழங்கினர்.

சுவாமிதரிசனத்தின்போது கோவில் உதவி அதிகாரி ராமமூர்த்தி ரெட்டி, வரவேற்பு அதிகாரி தாமோதரம் மற்றும் பலர் உடன் இருந்தனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த பயங்கர (வாத) முகம்!

பௌத்தம் பெரும்பான்மையாயுள்ள நாடென்ற விதத்தில் இலங்கைக்கு மியன்மார் நாட்டின் அரசியல் என்பது சிக்கலான விடயமாகும். இலங்கையை மியன்மாருடன் ஒப்பிட்டுப்பார்க்க ஒருவர் விரும்புவாராகில் இரு நாடுகளும் மத ரீதியில் பங்கேற்கும் பௌத்த வரலாற்றின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான அவ்வித ஒப்பீடொன்று சிரமமானதாக இருக்காது. தற்போதைய ஒப்பீடு இந்த வகையைச் சேர்ந்ததாயில்லாதது மன வருத்தத்திற்குரியதாகும். புத்தபெருமானது போதனைகள் மட்டில் ஒரு காலத்தில் ஒப்பீடு செய்யக்கூடியதாயிருந்த விடயங்கள் தற்போது இவையிரண்டிற்கும் பொருந்தாது.

அவையெல்லாம் இப்போது முரண்பாட்டுப் பிரபல்யம் கொண்ட வணக்கத்திற்குரிய விராது என்ற புத்த பிக்கு தலைமையில் நடத்தப்பட்டுவரும் மியன்மாரின் 969 என்ற சங்கேத பெயர் கொண்ட வன்முறை இயக்கம் மற்றும் இலங்கையின் பொதுபல சேனா போன்றவற்றின் வன்முறை நடவடிக்கைகளின் அடிப்படையில் அமைந்தவையாகவே இருக்கிறது.

ஒப்பீடுகள் உங்களது எதிர் பார்ப்பாயிருக்குமானால் அவற்றுக்கிடையிலான ஒத்த தன்மைகள் இயல்பையும் மீறிய ஒருவித் பயங்கரமூட்டும் செயற்பாடுகளுடன் கூடியவையாகவே இருக்கின்றன. அவற்றின் கனல்தெறிக்கும் ஆவேசப் பேச்சுக்கள் பயங்கரத்தினை ஏற்படுத்துவதாயிருப்பதுடன் வன்முறைக்குத் தூண்டும் ஆரம்பச் செயற்பாடுகளுங்கூட மியன்மாரின் 969 என்ற பயங்கர அமைப்பு அங்குள்ள பௌத்த மக்களை உசுப்பேற்றும் விதத்தில் செயற்படுவது போன்றே இலங்கையில் பொதுபல சேனா முஸ்லிம் ஆக்கிரமிப் பொன்றுக்கெதிராக நாட்டுமக்களை கிளர்ந்தெழச் செய்வதாகவே இருக்கிறது.

பௌத்த மியன்மார் நாட்டினை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் சவுதி அரேபியாவின் முயற்சிகளுக்கான நிதி மூலங்கள், சதித்திட்டங்கள் மற்றும் பள்ளிவாசல்களில் மேற்கொள்ளப்படும் இரகசிய கூட்டங்களுக்கும் பின்னணியாக இருப்பது போன்ற விதமான குற்றச்சாட்டுக்களே இலங்கையிலும் முன்வைக்கப்படுகிறது.

முஸ்லிம்களுடன் வர்த்தகத்தில் ஈடுபடலாகாது, கலப்புத் திருமணங்களுக்கு தடை போன்றவை ஒரே மதக் கோட்பாட்டு முறை போன்று கட்டாயப்படுத்தப்படுவது மட்டுமல்லாது அரங்கேற்றப்படும் அட்டூழியங்களுங்கூட ஒருவித ஒத்ததன்மை கொண்ட ஒழுங்கு முறை நடவடிக்கையாகவே இருக்கின்றன. பிரச்சினைகள் இயல்பானவை போல் ஆரம்பிக்கப்பட்டு பரவலான வன்முறைகளாக வளர்க்கப்படுகின்றன.

இன ரீதியான அல்லது துவேச உணர்வுடனான சிறிய பேச்சுக்கள் அல்லது வாக்குவாதங்களுங் கூட தொடரப்போகும் அட்டூழியங்களுக்கோ பேரழிவுகளுக்கோ ஆன துர்க்குறியாக ஆகிவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு.

முஸ்லிம்களின் சதித்திட்டமென ஒருவிடயத்தினை குறிப்பிட்டுக்காட்டி வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரமொன்று மக்களிடையே உணர்வுகளில் கொதிநிலையை உருவாக்கி ஏதோவொரு சிறிய விடயத்தைக் கூட பூதாகரமாக்கி விடுகிறது. மியன்மாரில் குறிப்பிடத்தக்க இவ்வித சம்பவங்களில் பௌத்த பொலிஸார் வெறும் பார்வையாளர்களாக இருந்ததான குற்றச்சாட்டுக்கள் பல இருக்கின்றன.

அண்மையில் இலங்கையின் அளுத்கமயில் நிகழ்ந்த குறிப்பான அந்த சம்பவமும் இதுபோன்ற தொரு ஒத்த தன்மையைக் கொண்டதென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மியன்மாரில் ஒரு நாள் இடம்பெற்ற ஒரு பௌத்தனின் கொலையைத் தொடர்ந்து அந்த நாள் முடிவடைவதற்கு முன்னர் 26 முஸ்லிம்களும் அடுத்த மூன்று நாட்களுக்கிடையில் மேலும் 20 முஸ்லிம்களும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. நான்காம் நாளில் கண்கண்ட சாட்சியங்களின் படி கைக்கோடரிகளுடன் வந்த பௌத்த கலகக்காரர்கள் முஸ்லிம்களை கொத்தியும் வெட்டியும் துரத்தியடித்ததில் ஏறத்தாழ 12 ஆயிரம் பேர் வீடுகளை விட்டு ஓடியிருந்ததுடன் அங்கு கிடந்த சடலங்கள் பின்னர் நெருப்பு வைத்து எரியூட்டப்பட்டுமிருந்தன.

அதற்கு முந்திய வருடம் இடம்பெற்ற வன்செயல் நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட 200 பேர் போக மேலும் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் இடம்பெயரக் காரணமாயிருந்த அதே அமைப்புத்தான் மேற்படியான கடந்த வருட அட்டூழியங்களுக்கும் பின்னணியில் செயற்பட்டிருந்ததாக தெரியவந்தது.

இலங்கையிலும் இந்த வருடம் ஆனிமாதம் இடம்பெற்ற அளுத்கம சம்பவத்தில் 4பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 165 பேர் காயங்களுக்கு உள்ளாகியும் முஸ்லிம்களின் 150 கட்டடங்களும் வீடுகளும் அழிக்கப்பட்டதுடன் அவர்களது தொழிற்றுறைகளும் இல்லாதொழிக்கப்பட்டன. இச்சம்பவத்திலும் பௌத்த பிக்குவுடன் சென்ற முச்சக்கரவண்டியொன்று முஸ்லிம்கள் இருவர் சென்ற உந்துருளியை முந்திச் செல்ல முற்பட்ட போது ஏற்பட்ட சிறியதொரு முரண்நிலையைத் தொடர்ந்து ஆரம்பித்த ஒன்றாக இருந்தது.

**இலங்கையில் பிரதிபலிக்கும் பௌத்தத்தின் பயங்கர முகம் எனும் தலைப்பில் சண்டே லீடரில் வெளிவந்த ஆராய்ச்சிக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பௌத்த பிக்கு உயிரிழந்து விட்டதாக பரப்பப்பட்ட வதந்தியொன்றே அடுத்த நாளில் செயற்படுத்தப்பட்ட பொதுபல சேனாவின் அரசியல் நாடகத்திற்கு களம் அமைத்துக் கொடுத்திருந்தது.

இச்சம்பவம் இடம்பெற்ற சில மணித்தியாலயங்களுக்குள் அளுத்கம நகரில் கூட்டப்பட்ட ஒன்றுகூடலொன்றில் மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தி வன்செயலுக்கு தூண்டியதான ஆதாரங்களுடன் கூடிய குற்றச்சாட்டுக்கள் பொதுபல சேனா மீது சுமத்தப்பட்டது. கூட்டத்தின்போது முஸ்லிம்கள் [illegible] பழிவாங்குதலொன்றுக்கு பௌத்த மக்களிடம் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வின்போது முஸ்லிம்கள்- அவர்களது வீடுகள்- தொழில் நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் நன்கு திட்டமிடப்பட்ட கும்பல்களால் மேற்கொள்ளப்பட்டவையென்பது நன்கு தெளிவாகவே தெரிந்தது.

இன்றைய நிலவரப்படி மியன்மாரின் பிரிவினைவாத அரசியல் சமூகங்களிடையே கோபதாபங்கள், அச்சம், வெறுப்பு, குரோதம் போன்றவற்றை வெற்றிகரமாகவே உருவாக்குவதுடன் சுயாதீனமான



பௌத்தர்களுங்கூட 969 இயக்கத்தின் பழிவாங்கல்களுக்கு அச்சப்பட்டு இவ்விடயங்களில் தலையிடாது விலகியிருக்கின்றனர்.

இப்பௌத்த அத்தீவிரவாதிகளின் 969 என்ற இயக்கப் பயன்பாட்டிற்கான காரணம் ஆர்வத்தைத் தூண்டுவதாயுள்ளது. அவர்களது கூற்றுப்படி முஸ்லிம்கள் தமது தொழில் வியாபாரங்கள் மட்டில் தூதர் முகமதை கௌரவிக்கும் விதத்தில் பயன்படுத்தும் 786 என்ற இலக்கத்தினால் ஏற்படும் சவாலை எதிர்கொள்வதே தமது 969 இலக்கத்தின் நோக்கம் எனவும் முஸ்லிம்களின் 786 இலக்கமானது 21 ஆம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் உலகில் ஏற்படுத்தவிருக்கும் இஸ்லாமிய ஆதிக்கத்தை முக்கியப்படுத்துகிறதென்பதே வண. விராது தேரரது அமைப்பின் நம்பிக்கையுமாகும்.

விராதுதேரரின் கடும்போக்குப் பௌத்த அமைப்பான 969 இன் இலட்சியக் கோட்பாடுகளின் இலங்கைப் பங்காளிகளான பொதுபல சேனா அமைப்பின் மாநாட்டு ஒன்றுகூடல் ஒன்றில் பங்குகொள்ளும்படி விராது தேரருக்கு விடுக்கப்பட்ட அழைப்பானது மனங்கொள்ளப்பட வேண்டிய பல விடயங்களையும் நினைவூட்ட உதவுகிறது. அதாவது தவறான வழியில் இறங்கிவிடக் கூடிய மனித பாமரத்துவ பலவீனங்கள் மற்றும் ஏனைய ஆபத்துக்கள் போன்றவற்றுடன் நாட்டில் நிலை [illegible] கூடியதுமான இந்த மாதிரியான அரசியல் ஆபத்துக்களும் மனதிற் கொள்ளப்படவேண்டும்.

அத்துடன் அளுத்கமவில் முஸ்லிம்கள் தீவிரவாத பௌத்த கலகக் கும்பல்களின் கையில் படநேர்ந்த அன்றைய பயங்கரத்தின் நினைவுகளை மீண்டும் கிளறும் விதத்திலான இவ்வித நிகழ்வுகளையிட்டு கருத்திற் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கடமையும் அரசாங்கத்திற்கே உண்டு. மேலும் தனது சிறுபான்மை மக்கள் மட்டில் மனிதவுரிமைகள் அடிப்படையில் பலவிடயங்களையும் சர்வதேச ஆதரவுடன் கையாள எதிர்பார்க்கப்படும் அரச நிர்வாகமொன்று மேற்கூறிய நிலைமைகளையிட்டு பாராமுகமாக இருந்துவிடலாகாது.

தன்னைத்தானே பர்மாவின் பின்லேடன் எனக்கூறிக் கொள்பவரும் 2012 ஆம் ஆண்டில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவருமான இந்த விராது தேரரே இன்று மியன்மாரில் பற்றி எரிந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களுக்கெதிரான தீவிரவாதிகளின் செயற்பாடுகளுக்குப் பின்னணியில் இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறார்.

தெளிவான முகத்தோற்றத்துடன் வணக்கத்திற்குரிய ஒருவராகக் காணப்படும் விராது தேரரின் மற்றொரு மறைமுகம் பல்வேறு உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள் கொண்டதா? பிரிவினைவாத அரசியலையே தொடர்ந்து கடைப்பிடித்துவரும் இவரது 969 என்ற இந்த அமைப்பினூடாக சிறுபான்மை முஸ்லிம்களுக்கெதிராக இவர் கட்டவிழ்த்து விட்டிருக்கும் வன்முறை நடவடிக்கைகள் அனைத்தும் மன்னிக்கப்படக் கூடாதவையாகவே இருக்கிறது.

969 கோட்பாடுகளுக்கிணையான பொதுபல சேனாவின் கோட்பாடுகள்

கடந்த வாரம் தனது சங்க மகா சபையில் பொதுபலசேனா மேற்கொண்ட தீர்மானத்திற்கு இணையான தீர்மானத்தின் அடிப்படையிலேயே பௌத்தசமயம் அரச மதமாக அங்கீகரிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையொன்றை 969 அமைப்பும் மியன்மார் அரசிடம் முன் வைத்துள்ளது. விராது தேரரின் அந்த அமைப்பின் அதே இலட்சியக்கோட்பாட்டு அடிப்படையிலான பௌத்த சாசன பிரகடனமொன்றை வரைந்துகொண்ட பொதுபல சேனா அமைப்பும் தற்போது இருப்பதிலும் பார்க்க கூடுதல் பெருநோக்குடன் கூடிய அரச அங்கீகாரத்துடன் சிங்கள பௌத்தர்களுக்கான கூடுதல் பாதுகாப்பையும் இலங்கை அரசிடம் கோரியுள்ளது. பொதுபல சேனா அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரியான டிலாந்த வித்தான கூறும்போது, நாட்டில் ஒரேயொரு தேசிய இனம் தான் இருக்க வேண்டும். அதாவது சிங்களவர் இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் சிங்கள தமிழர்கள் முஸ்லிம்கள் சிங்கள முஸ்லிம்கள் மற்றும் இந்துக்கள் சிங்கள இந்துக்கள் என்பதே அவரது கூற்றாகும்.

இவரது இக்கருத்தானது விடயங்கள் ஆபத்தான முறையில் பகுத்தறிவும் அப்பாற்பட்ட திருப்பங்களுக்கு வழியேற்படுத்துவதாகவே இருக்கிறது. இக்குழுவினது வளர்ச்சியும் ஏற்றமும் மூன்று தசாப்தங்களாக இழுபட்ட நீண்டதோர் போர்க்கால நிலைமைகளுக்கூடாக மீண்டு கொண்டிருக்கும் ஒரு நாட்டிற்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்காது. வெளிப்படையாகவே வன்செயலை ஒப்பேற்றியிருந்த பொதுபல சேனா அமைப்பு உயர் மட்ட அதிகாரத் தலைமையால் கடுமையாக கண்டிக்கப்பட வேண்டும். இந்தவிதமான ஒரு காலகட்டத்தில் இனவாத அரசியல் என்பது போரினால் களைப்புற்றிருக்கும் இலங்கையின் அபிவிருத்திக்கோ வளர்ச்சிக்கோ உதவுவதாக இருக்கமுடியாது.

எமது சொந்த அயலிலுள்ள மிகப்பெரிய நாடான இந்தியாவின் எடுத்துக்காட்டினை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பின்பற்றி செயற்படுவாரேயாகில் அது அவர்மட்டில் பெரும் நன்மைபயக்கும் ஒன்றாகவே இருக்கும்.

பூகோள ரீதியில் பொருளாதார இராட்சதனாயிருக்கும் நாட்டிற்குப் பிரதமராகப் பதவியேற்று சில மாதங்களிலேயே தனது கூட்டணியைச் சேர்ந்த பிரச்சினைக்குரிய சிவ சேன கட்சியைத் தவிர்த்தே வருகின்ற மகாராஷ்டிர மாநிலத் தேர்தலுக்கு முகங்கொடுக்கும் தனது விருப்பத்தினை நரேந்திரமோடி வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பல்வேறு சமூகங்களுடன் இணைந்து செயற்படவேண்டியதாயுள்ள ஒரு நாட்டின் பிரதமர் என்ற பொறுப்பில் இருக்கும் அவர் சரியான தருணத்தில் தம்முடன் இருந்த தீவிரவாதக்கட்சி ஒன்றினைத் தவிர்த்து செயற்படும் அவரது அந்த அரசியல் முதிர்ச்சி புகழப்படவேண்டிய ஒன்றேயாகும். அதேவிதம் தனது UPFA கூட்டணிக்குள்ளிருந்து முன்னரும் செயற்பட்டது போல் தமது அரசியல் சித்து விளையாட்டுக்களைத் தொடர்ந்தும் நடத்தவிருக்கும் தமது அரசியல் வெற்றுவேட்டுச் சுமைகளை இறக்கி விடவேண்டிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இருப்பதை கருத்திற்கொள்ளாது விட்டுவிடமுடியாது.

**தமிழில்: யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014

## மாதிரி வினாத்தாள்- மேல்மாகாணம்

**விஞ்ஞானம்** **பகுதி I** **இரண்டு மணித்தியாலங்கள்**

(நேற்றைய தொடர்ச்சி).. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

28.அகவெப்பத் தாக்கத்தைக் காட்டும் சக்தி மட்டவரைபு




29. ஒட்சிசன் வாயு தயாரிப்பதற்கு ஆய்வு கூடத்தில் பயன்படுத்த முடியாத சேர்வை எது?

1.$KClO_3$ 2.$KMnO_4$
3.$KNO_3$ 4.$MnO_2$

30. உலோகத்தாதிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுப்பதற்கு பயன்படுத்தப்படும் படிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

a. உலோகச் சேர்வையிலிருந்து உலோகத்தைப் பெற்றுக் கொள்வதற்கான இரசாயனத் தாக்கங்களுக்கு உட்படுத்தல்
b. உலோகச் சேர்வை பிரித்தெடுத்தல்
c.உலோகத் தாதிலிருந்து தேவையற்ற பாறைப்பகுதிகள், மண் என்பவற்றை அகற்றுதல்
d. பொருத்தமான உலோகத் தாதை தெரிவு செய்தல்
e. உலோகத்தைப் பெற்றுக் கெள்ளுதல்

சரியான ஒழுங்குமுறை


1. d,c,a,b,e 2.d,c,b,a,e
3.d,a,c,b,e 4.d,b,a,c,e

31.X இன் ஒட்சைட்டின் சூத்திரம் $X_2O_3$ எனின் X இன் சல்பேற்றின் சூத்திரம்

1.$X_3(SO_4)_2$ 2.$X_2(SO_4)_3$
3.$X_2SO_4$ 4. $X_3SO_4$

32. ஓய்விலுள்ள பொருளொன்று எளிய நேர்கோட்டுப் பாதையில் ஆர்முடுகலுடன் குறிப்பிட்ட நேரம் பயணித்து உச்ச வேகத்தை பெற்றுக் கெ்ாண்டது. இப்பொருள் சென்ற தூரத்தைக் காண்பதற்குப் பொருத்தமற்ற சமன்பாடு?


1.$S=\frac{(u+V)t}{2}$ 2.$S=ut+\frac{1}{2}at^2$
3.$V^2=u^2+2as$ 4.$u^2=V^2+2as$



33.மேலே தரப்பட்டுள்ள எளியபொறி தொடர்பான பிழையான கூற்று
(உராய்வும், கோலின் திணிவும் புறக்கணிக்கப்பட்டது)


1. சுமை, எத்தனம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும் வேலைகளின் அளவு சமனாகும்.
2. எத்தனம் அசைந்த தூரத்தை விடக் குறைவான தூரத்தை சுமை அசைந்தது.
3.பொறிமுறைநயம், வேகவிகிதம் ஆகியவற்றின் பெறுமானங்கள் சமனாவதில்லை.
4.சிறிய கற்துண்டை அகற்றி எத்தனத்தை எதிர் திசையில் வழங்கிப் பொருளை அசைத்தால் அது இரண்டாம் வகை நெம்புகோலாகச் செயற்படும்.

34.AB,CD ஆகியவை சமனான விட்டத்தைக் கொண்ட நிக்குரோம் கம்பிகளாகும். AB=6cm,CD=12cm ஆகும். இரண்டு கம்பிகளும் சமமானநேர இடைவெளியில் சுற்றுடன் தொடுக்கப்பட்டன. இக் கூற்றுகளுள் சரியானது.





1.ஒரேயளவில் வெப்பமடையும்.
2.AB ஐ விட CD வெப்பமடையும்
3.CD ஐ விட AB வெப்பமடையும்.
4. வெப்பமடைதல் தொடர்பாக கூறுவதற்கு தகவல்கள் போதுமானதல்ல.

35. பின்வரும் கதிர்வரிப்படங்களில் தவறானது.




36. அருகில் தரப்பட்டுள்ள இலத்திரனியல் துணைசாதனம் தொடர்பான சில கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.





a)இது npn வகை திரான்சிஸ்டராகும்.
b)C முனையுடன் மின்கலத்தின் (+) முனைவு இணைக்கப்படவேண்டும்.
v) C முனை உடைந்தாலும் ஏனைய இரண்டு முனைகளும் இருவாயி போல் தொழிற்படும்.

இவற்றில் சரியானவை

1. A,B மட்டும் 2.B,C மட்டும்.
3. C,D மட்டும் 4.A,B,C எல்லாம்.

37.





X,Y புள்ளிகளுக்கு எளியமின்னோட்டத்தை வழங்கினால்

1. சட்டக்காந்தம் மின்காந்தத்தை நோக்கி அசையும்
2.சட்டக்காந்தம் மின்காந்தத்தை விட்டுவிலகி அசையும்
3. சட்டக்காந்தம் முதலில் கவர்ந்து பின்னர் தள்ளும்
4. சட்டக்காந்தம் முதலில் தள்ளி பின்னர் கவரும்.

38. தகவல் தொடர்பாடல் தொகுதியொன்றில் யாதேனும் தகவலொன்றை ஊடுகடத்துவதற்குப் பொருத்தமானதாக மாற்றியமைப்பது.

1. மட்டிசைத்தல் 2.மட்டிசைப்பழித்தல்
3. பரிபாடைநீக்கல் 4. பரிபாடையாக்கல்.

39.





உருவப்படத்தில் காட்டப்பட்டுள்ள சுற்றில் அம்பியர்மானியின் வாசிப்பு

1.0.5A 2.1A
3.1.5A 4.0.6A

40.அண்மைக் காலமாக கடல் நீர் மட்டம் படிப்படியாக அதிகரித்துச் செல்வது அவதானிக்கப்பட்டது. இதற்கான காரணம்?

1.அண்மைக்காலமாக மழைகாரணமாக சூழலுடன் சேரும் நீரின் அளவு அதிகரித்தல்
2. மேட்டு நிலங்கள் மண்ணரிப்புக்கு உள்ளாகி கடலின் ஆழத்தை குறைத்தல்
3.சூழலுக்கு $CO_2$ வாயுவிடுவிக்கப்படுவதால் சூழல் வெப்பநிலை அதிகரித்து பனிக்கட்டி உருகுதல்
4 கிளேசியர் பனிப்பாறை உடைத்து விழுந்து கடலை வந்தடைதல்.

# வெடிகுண்டு தாக்குதல்களில் 47 பேர் பலி!



(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் ஷியா முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பக்தாத்தின் தென்புறநகர் பகுதிகளில் நடந்த தொடர் வெடி குண்டு தாக்குதல்களில் 47 பேர் கொல்லப்பட்டனர். 123 பேர் படுகாயம் அடைந்தனர்.


இது குறித்து ஷியா அரசியல் பிரமுகர் ஒருவர் கூறுகையில், கடந்த சில நாட்களாக ஷியா பிரிவினர் வாழும் பகுதிகளில் வன்முறைகளும் தாக்குதல்களும் அதிகம் நடைபெற்று வருகின்றன.

பக்தாத்தின் வடபகுதி மாவட்டமான தலிபியாவில் இராணுவ சோதனை சாவடி அருகே நடந்த மனித வெடிகுண்டு தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

45 நிமிடங்கள் கழித்து, மேற்கு பக்தாத்தில் அல்-தவாலை மாவட்டத்தில் நடந்த கார்வெடி குண்டு தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டனர். 35 பேர் படுகாயம் அடைந்தனர்.

சில நிமிடங்களுக்கு பின்னர் மேற்கு பாகிஸ்தான் அல் -சாவுலா மாவட்டத்தில் ஐந்து பீரங்கி தாக்குதல் நடத்தியதில் 5 பேர் கொல்லப்பட்டனர். 21 பேர் படுகாயம் அடைந்தனர். ஹுீர்ரிய மாவட்டத்தில் நடந்த கார் வெடிகுண்டு தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். 14 பேர் காயம் அடைந்தனர். ஆலவி மாவட்டத்தில் ஒரு கோப்பி ஷாப்பில் நடந்த வெடிகுண்டு தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர். 6 பேர் படுகாயம் அடைந்தனர்

இந்த வன்முறைகள் பக்தாத்தின் தென் கிராம புறங்களையும் அடைந்து உள்ளது. மொக்முதியா மாவட்டத்தில் நடந்த வெடி குண்டு தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். 18 பேர் படுகாயம் அடைந்தனர்.



இஸ்லாமிய அரசு ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் அறிக்கை ஒன்றில் தங்களுக்கு எதிராக ஷியா பிரிவினர் போராடி வருகின்றனர். அதனால் உங்களையும் உங்கள் வீடுகளையும் இலக்காக கொள்கிறோம். என கூறியுள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைகளுக்கு இடையே
உண்மை வெற்றி பெறும்.
-ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நடமாடும் சேவையினைக் கூட நடத்தவிடாது குழப்புகிறது அரசு

## வடமாகாண அமைச்சர் குற்றச்சாட்டு

வட மாகாணசபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மக்களை நோக்கி நடமாடும் சேவையில் அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வதற்கு வவுனியா அரசாங்க அதிபர் தடை விதித்திருந்ததாக வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் வழிகாட்டலின் கீழ் வட மாகாண சபை நடத்தும் மக்கள் குறைகளை நிவர்த்தி செய்யும் நடமாடும் சேவை வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் புளியங்குளத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், இந்த நடமாடும் சேவை தொடர்பாக அரசாங்க அதிபருடன் நேரடியாக பேசியிருந்தோம். ஆனால் மாகாணசபையால் நடத்தப்படும் இந்த நடமாடும் சேவையை எப்படியாவது குழப்பி விட வேண்டும் என்ற செயற்பாடுகள் இன்று காலை வரை இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

அத்துடன் பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள் உட்பட திணைக்கள தலைவர்களுக்கும் அரசாங்க அதிபர் கடும் தொனியில் இந் நடமாடும் சேவைக்கு ஒத்துழைப்பு வழங்க கூடாது என தெரிவித்துள்ளார்.

அதற்கு காரணமாக எதிர்வரும் 20 ஆம் திகதி திவிநெகும மரம் நடும் நிகழ்ச்சி திட்டத்திற்காக அரச அதிகாரிகளுக்கு வேலைப்பழு உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எமது மக்களையும் மரங்களையும் ஒரே நிலையில் அவர் எண்ணியுள்ளதாகவே நான் கருதுகின்றேன். எனினும் எமது வட மாகாண மக்களின் வாழ்வுக்காக அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் செயற்பாட்டை நிறைவேற்றிகொள்ள நாம என்றும் பாடுபடுவோம். வட மாகாண சபையில் இயங்கும் அமைச்சுக்களின் அதிகாரிகளை கொண்டு இந்நடமாடும் சேவையை நாம் நடத்திவருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வட மாகாண அமைச்சாகளான பொ.ஐங்கரநேசன், குருகுலராஜா, பா.டெனிஸ்வரன, வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், மாகாணசபை உறுப்பினர்களான ஆர். இந்திரராஜா, எம். தியாகராசா உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-250)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் முதியோர்,மாற்றுவலுவுடையோர் தினம்

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகமும் பிரதேச முதியோர் பேரவையும் இணைந்து நடத்தும் சர்வதேச முதியோர், மாற்றுவலுவுடையோர் தின விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30மணிக்கு பிரான்பற்று பண்டத்தரிப்பு அருளமுதீஸ்வரி கலாபவானந்தசுரபி திருமண மண்டபத்தில் வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தலைமை யில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் எஸ்.சிங்கபுலி, வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலக பிரதம கணக்காய்வாளர் திருமதி இராஜேஸ்வரி உதயகுமார், வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலர் .க.ஸ்ரீமோகனன், ஓய்வுநிலை யாழ்.மாவட்ட சமூகசேவைகள் அலுவலர் ஆ.ஞானவேல், யாழ்.மாவட்ட சமூகசேவைகள் அலுவலர் வ.செல்வம் மற்றும் சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வு செயற்திட்ட மாகாண இணைப்பாளர் வ.சுரேஸ்குமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்

பிரான்பற்று பண்டத்தரிப்பு அருளமுதீஸ்வரி கலாபவானந்த சுரபி திருமண மண்டப நிர்வாகத்தினர் விழாவிற்கான பிரதான அனுசரணையினை வழங்கி விழா சிறக்க வாழ்த்துகின்றனர். வட மாகாண சமூகசேவைகள் திணைக்களம், முதியோர்களுக்கான தேசிய செயலகம், சமயப்பெரியோர்கள், கிராமிய மட்ட முதியோர் சங்கங்கள், பிரதேச பொது அமைப்புக்கள் மற்றும் வங்கிகள் இணை அனுசரணை வழங்குகின்றனர். யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பஸ்கம்பனிகளின் இணையம் விழாவிற்கான சிறப்புப் போக்குவரத்து வசதி களை ஒழுங்கமைத்து உதவுகின்றது. (இ-23)

## ஐரோப்பிய நீதிமன்றின் தீர்ப்பு என்ன சொல்கிறது

விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்ல. எனவே பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகளை நீக்க வேண்டுமென ஐரோப்பிய நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் இருந்து நீக்குதல் என்ற ஐரோப்பிய நீதிமன்றின் தீர்ப்பு விடுதலைப் புலிகளுக்கு எந்தளவு தூரம் நன்மை பயக்கும் என்பது பற்றி நாம் இங்கு எதுவும் ஆராயவில்லை.

ஆனால்; நீதிமன்றின் தீர்ப்பு எதைக் கூறுகிறது என்பது பற்றியே நாம் இங்கு நோக்குதல் வேண்டும்.

இந்திய தேசத்தை காலனித்துவத்திற்குள் வைத்திருந்த பிரித்தானியா, சுபாஸ் சந்திரபோஷின் போராட்டத்தை முடக்குவதற்குக் கடும் பிரயத்தனம் செய்திருந்தது.

கூடவே மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டத்தையும் ஆங்கிலேயர் அடக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

ஈற்றில் காந்தியின் அகிம்சைப் போர்; பாரத தேசத்திற்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தது.

மகாத்மா காந்தி, சுபாஷ் சந்திரபோஸ் போன்றவர்களின் போராட்டத்தால் கடுப்பேறியிருந்த பிரித்தானியர்களிடம் இப்போதும் அந்தக் கடுப்பு நிலை இருக்கிறதா? என்று கேட்டால் இல்லவேயில்லை.

தற்போது மகாத்மா காந்தியின் சிலையை லண்டன் மாநகரில் நிறுவி காந்தியின் அகிம்சைக்கு உயரிய கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

ஆக; ஒருகாலத்தில் மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டத்தை எதிர்த்த பிரித்தானியர்கள், இப்போது காந்தியின் அகிம்சைக்கு அகவணக்கம் செய்யும் அளவில் மாற்றம் கண்டுள்ளனர்.

இதுபோன்றதொரு நிலைமையையே விடுதலைப் புலிகள் தொடர்பில் ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எடுத்துக் காட்டியுள்ளது.

அதாவது விடுதலைப் புலிகள், இலங்கையில் ஆளும்வர்க்கத்திற்கு எதிரானவர்களாக இருந்தனர்.

இத்தகைய எதிர்ப்பு என்பது ஆளும்வர்க்கம் இலங்கைத் தமிழர்களுக்குச் செய்த நிட்டூரத்தின் விளைவானது.

தமிழ் மக்களின் உரிமைகள் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டிருந்தால்-இனத்துவத்தில் சமத்துவம் பேணப்பட்டிருந்தால் விடுதலைப் புலிகளின் தோற்றம் என்பது தேவைப்பட்டிருக்க மாட்டாது.

ஆக; விடுதலைப் புலிகளின் தோற்றம், அடக்கப்பட்ட இனத்தின் விடுதலைக்குத் தேவையானதெனும் போது அங்கு இனம் சார்ந்த நியாயம் தென்படுகிறது.

அதாவது இலங்கை அரசைப் பொறுத்தவரை அவர்கள் இலங்கை அரசுக்குப் பயங்கரவாத அமைப்பாக இருக்கும் அதேவேளை; தமிழ் மக்களின் உரிமை மீட்பர்களாக இருந்துள்ளனர்.

அப்படியானால் உலக அரங்கில் அவர்களை பயங்கரவாத அமைப்பாக நோக்குவது நியாயமற்றது என்ற அடிப்படைவாதம் எழுகிறது.

ஒரு தரப்பிற்குப் பயங்கரவாத அமைப்பாக இருக்கும்போது இன்னொரு தரப்பிற்கு உரிமைக்காப் போராடும் அமைப்பாக இருத்தல் என்ற நிலைமையை போராட்ட அமைப்புகள் கொண்டிருப்பது குறித்தும் சர்வதேசம் சிந்திக்கின்றது என்ற முடிபை, ஐரோப்பிய நீதிமன்றின் தீர்ப்பு தெளிவுபடுத்தியுள்ளதெனலாம்.

எது எப்படி இருப்பினும் விடுதலைப் புலிகள், பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்ற ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்பு தமிழ் மக்களின் போராட்டத்திற்கான ஒரு அங்கீகாரமாகக் கருதக் கூடியது என்பதையும் இதன் அடிப்படையில் சர்வதேசத்தின் அணுகுமுறைகள் அமையும் என்பதையும் இப்போதைக்கு கூறமுடியும்.

## 2 வாரங்களில் 45 இலட்சம் மோசடி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களில் 43 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் காசோலை மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக யாழ். உதவிப் பொலிஸ அத்தியட்சகர் பி.ஏ. நிஹால் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.தலைமை பொலிஸ் நிலையத்தில் நேற்று மு.ப 10 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.மீசாலை பகுதியில் வியாபார நோக்கத்திற்காக 17 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் காசோலை மோசடி செய்தமை அதிகூடிய மோசடி சம்பவமாக இடம்பெற்றுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் வியாபார நோக்கத்திற்காக 13 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் காசோலை மோசடியும், கே.கே.எஸ்.வீதியில் அதே நோக்கத்திற்காக 8 இலட்சம் ரூபாய் காசோலை மோசடியும் மற்றும் அரியாலை பகுதியில் 5 இலட்சம் ரூபாய் காசு மோசடியும் இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பிலான சந்தேகநபர்கள் சிலர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் மற்றைய சந்தேக நபர்கள் தொடர்பிலான புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்தார். (இ-[illegible])

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



மூன்றாவதாக நீங்கள் உங்கள் இருதயத்தின் ஆசைகளைக் கண்டறிய வேண்டும். ஆசைகள் இருப்பது நன்மையா அல்லது தீமையா? உங்களில் சிலர் ஆசைகள் இருப்பறீர்கள்.

2500 வருடங்களுக்கு முன் பத்தர் ஆசைகளை துறந்து, இராச்சியத்தை துறந்து, தவம் செய்து, ஞானோதயம் பெற்றார். உலகிற்கு அவர் அளித்த செய்தி ஆசையே துன்பத்திற்கு மூலகாரணம். ஆசையை அறவே விட்டொழியுங்கள் என்பதே.

ஆனால் புத்தர் உண்மையில் இரண்டு சத்தியங்களைக் கூறியுள்ளார். அவை இருதயத்திலிருந்து வரும் ஆசைகள் நியாயமானவை. மனதின் ஆச்சகளைத்தான் துறக்க வேண்டும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### சிங்கம் போல் செயற்படு!




- எல்லாவிதமான அறிவும், ஆற்றலும் மனிதனுக்குள்ளே இருக்கிறது என்று வேதாந்தம் பறைசாற்றுகிறது.
- செம்மறி ஆடுகள் போல இருக்க வேண்டாம். மயக்கத்தை உதறி விட்டு சிங்கம் போல வீரமாகச் செயல்படுங்கள்.
- மூளை, தசை, நரம்பு என உடம்பின் எல்லா பாகத்திலும் லட்சிய சிந்தனை நிறைந்திருக்கட்டும்.
- பசியால் வாடும் மனிதனிடம் ஆன்மிகம் பேசுவது ஒருவனை அவமதிப்பதற்குச் சமம்.
- தெய்வீக சிந்தனை இல்லாவிட்டால் மனிதனின் அறிவும், ஆற்றலும் கீழ்நோக்கிச் சென்று விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் முருகுப்பிள்ளை நிர்மலன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி

## முல்லை. சென் ஜூட் சம்பியன்





அமரர் முருகுப்பிள்ளை நிர்மலனின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் முல்லைத்தீவு சென்.ஜூட் அணிவெற்றி பெற்று சம்பியனானது.

முன்னதாக இப்போட்டியானது இரண்டு சுற்றுக்களாக நடத்தப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களிடையே அணிக்கு 9 பேரைக் கொண்ட விலகல் முறையில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதலாம் இடத்தை யங்ஸ்டார் அணியும் இரண்டாவது இடத்தை அல்மதர் அணியும் அடைந்தன. இதேவேளை முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட நடத்தப்பட்ட அணிக்கு 9 பேரைக் கொண்ட விலகல் முறையிலான போட்டியில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு சென் ஜூட் அணியும் இரண்டாம் இடத்தை முள்ளியவளை வளர்மதி அணியும் அடைந்தன. இவற்றிற்கான இறுதிப் போட்டிகள் கடந்த புதன்கிழமை முள்ளியவளை விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டது.

முதலில் மூன்றாம் நிலைக்கான போட்டியாக இரண்டு மாவட்டங்களிலும் இரண்டாம் நிலையை அடைந்திருந்த முள்ளியவளை வளர்மதி அணிக்கும் வவுனியா அல்மதர் அணிக்குமிடையே நடத்தப்பட்டது. போட்டி ஆரம்பமாகி 15 ஆவது நிமிடத்தில் வளர்மதி அணியின் ஆரணியன் கோல் கம்பத்தினை நோக்கிச் செலுத்திய பந்தினை சுஜிபவன் கோலாக்கினார். 17 ஆவது நிமிடத்தில் அதே அணியின் கிதர்சன் வழங்கிய பந்தை மீண்டும் சுஜீபவன் கோலாக்கினார். தொடர்ந்து போட்டியின் 23 ஆவது நிமிடத்தில் சுஜிபவன் தனக்குக் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்தி மீண்டும் அணிக்கான மூன்றாவது கோலினையும் செலுத்தினார்.





இரண்டாவது பாதியிலும் வளர்மதி அணியின் பக்கமே ஆதிக்கம் அதிகம் இருந்த போதும் அவர்கள் தொடர்ந்து கோல் எதனையும் பெற்றுக் கொள்ளாத வகையில் அல்மதர் அணியினர் வியூகத்தை அமைத்து தற்காத்துக் கொண்டனர்.

இறு தியில் 3:0 என்ற ரீதியில் கோல்களை இட்டு வளர்மதி அணியினர் மூன்றாம் அணியாக வெற்றியீட்டினர்.

தொடர்ந்து சம்பியன் அணியை தெரிவு செய்வதற்காக இரண்டு மாவட்டங்களிலும் முதல் நிலைகளைப் பெற்றுக் கொண்ட அணிகளான முல்லைத்தீவு சென் ஜூட் அணிக்கும் வவுனியா யங்ஸ்டார் அணிக்கும் இடையே போட்டி நடத்தப்பட்டது. ஆட்டம் ஆரம்பம் முதலே பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் அமைந்திருந்தது. ஆனாலும் சென். ஜூட் அணியினரின் பக்கமே ஆதிக்கம் அதிகமாக இருந்த போதும் முன்னணி வீரர்களான தீபன் ஸ்ரீ ஆகியோர் தமக்குக் கிடைத்த கோல் போடும் சந்தர்ப்பங்களை தவறவிட்டுமிருந்தனர்.

போட்டி நிறைவடையும் வரை இரு அணிகளும் கோல் எதனையும் பெறாத நிலையில் வெற்றியை தீர்மானிப்பதற்காக பனால்டி உதை வழங்கப்பட்டது.

இதில் சென் ஜூட் அணியினர் 4 சந்தர்ப்பங்களை கோலாக்கினர். இதன்மூலம் முல்லைத்தீவு சென் ஜூட் அணியின் தீபனும் சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் கோல் காப்பாளரும் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர். (க)



# பேஸ்புக்கில் 100 மில்லியன் லைக் பெற்ற ரொனால்டோ

காற்பந்து களத்தில் கலக்கி கொண்டிருக்கும் ரொனால்டோ, பேஸ்புக்கில் 100 மில்லியன் லைக்குகளை பெற்ற சாதனைக்கு சொந்தக்காரராகி இருக்கிறார். பேஸ்புக்கில் 100 மில்லியன் லைக் பெறும் முதல் விளையாட்டு வீரர் எனும் சிறப்பையும் அவர் பெற்றுள்ளார். பேஸ்புக்,டுவிட்டர் உள்ளிட்ட சமூக ஊடகங்களை இணையவாசிகள் மட்டும் அல்லாமல் திரைப்பட நட்சத்திரங்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளும் பயன்படுத்தி வருகின்றனர். பேஸ்புக் வரலாற்றிலேயே 100 மில்லியன் லைக் பெற்ற இரண்டாவது நபர் என்ற பெருமையும்,




முதல் விளையாட்டு வீரர் என்ற சிறப்பும் அவருக்கு கிடைத்திருக்கிறது. 100 மில்லியன் லைக்குகளை முதலில் பெற்ற பெருமைகொலம்பிய பொப் பாடகி ஷகிராவுக்கு உரியது. சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற கால்பந்து உலக கோப்பையின் போது அவர் இந்த சிகரத்தை எட்டிப்பிடித்தார். இப் போது போர்த்துக்கல் வீரரும் ரியல் மேட்ரிட் காற்பந்து குழுவுக்காக விளையாடுபவருமான கிறிஸ்டினா ரொனால்டோ 100 மில்லியன் லைக்குகளை தொட்டிருக்கிறார். பாடகர்களான எமினம் 96 மில்லியன் லைக மற்றும் ரிஹானா 90 மில்லியன் ஆகியோர் அடுத்த இடங்களில் உள்ளனர். விளையாட்டு நட்சத்திரங்களை பொறுத்த வரை ஆர்ஜென்டினா வீரர் லீயோனெல் மெஸ்ஸி 74 மில்லியன் லைக்குகளுடன் 9 ஆவது இடத்திலுள்ளார். ரொனால்டோ 100 மில்லியன் லைக்குகளுக்கு நன்றி தெரிவித்து சிறப்பு வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கூடைப்பந்தாட்ட போட்டி-2014

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் வருடா வருடம் நடத்தப்படுகின்ற அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியானது இவ் வருடமும் வடமாகாண ரீதியில் நடத்தப்படவுள்ளது. அந்த வகையில் 15.10.2014 இன்று போட்டிகள் ஆரம்பமாகி 30.10.2014 அன்று இறுதிப் போட்டிகளுடன் நிறைவு பெறவுள்ளது.

பிற்பகல் ஆறு மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா தமிழ் மகா வித்தியாலயமும் 7.30 மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய போட்டியில் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து மல்லாவி மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன.







அணமையில கொழுமபு சுகததாச விளையாடடரஙகில இடமபெறற தேசிய மடட பாடசாலைகளுககு இடையிலான தடகளப போடடிகளில வெறறியடடிய எழுவைதவு மணணின மைநதரகள கௌரவிககபபடடனர.21 வயது பிரிவில ஆணகளுககான உயரம பாயதல நிகழவில முதலாமிடம பெறற எழுவைதவு மணணின மைநதனும, யாழ இநதுக கலலூரி மாணவனும எழுவைதவு முருகவேள விததியாலய பழைய மாணவனுமாகிய க.தனுசனுககும, 17 வயதுககுடபடட பெணகளுககான ஈடடி எறிதல நிகழவில மாகாண மடடததில முதலாமிடம பெறறு தேசிய மடடததில பஙகுபறறிய எழுவைதவு முருகவேள [illegible] கலசியாவுககும, எழுவைதவு மணிவாசகர சனசமூக நிலையததினரால பாராடடு விழா அணமையில சிறபபாக நடததபபடடது.கௌ[illegible]வரபபடுவதையும, கௌரவிபபு நிகழவுகளையும, படஙகளில காணலாம. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றிய தீர்ப்புக்கு பொது பல சேனா எதிர்ப்பு

## புலிகள் இயங்குவதாகவும் குற்றச்சாட்டு

ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்ப்பிற்கு பொது பல சேனா இயக்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதாக ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நாட்டில் இயங்கிவரும் பிரிவினைவாத சக்திகளை இல்லாதொழிக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது பல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் அமைப்புக்களுக்கு எதிராக அரசாங்கம் முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டை பிளவுபடுத்தும் நோக்கில் இயங்கி வரும் தரப்பினர் தொடர்ந்தும் நாட்டில் இயங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் தீர்மானமானது நாட்டில் மீளவும் பிரச்சினைகளை ஏற்படுத்த வழியமைக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மூன்று பிரிவுகளாக செயற்பட்டு வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இராணுவம், அரசியல் மற்றும் சர்வதேசம் ஆகிய மூன்று பிரிவுகளாக இயங்கி வந்ததாகவும், படையினர் இராணுவப் பிரிவை மட்டுமே இல்லாதொழித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக இயங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# இந்தியா செல்கிறார் பாதுகாப்பு செயலாளர்

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

இதற்காக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எதிர்வரும் வாரத்தில் புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முதல் தடவையாக இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகரை சந்திக்கவுள்ளார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கும், இலங்கை பாதுகாப்புச் செயலாளருக்கும் இடையில் இடம்பெறும் வழமையான சந்திப்பாக இச்சந்திப்பு இருக்கலாம் என இலங்கை படைத்தரப்பின் குரல்தரவல்ல அதிகாரி ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

2013ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும் இவ்வாண்டு மார்ச் மாதத்திலும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா மகாதேவி



சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் கரணவாய் வலன் தோட்டத்தில் வசித்தவரும் தற்போது செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாதேவி 17.10.2014 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாயம்-செல்லம் தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் மனைவியும் (மகாதேவி), பூமாதேவி மற்றும் காலஞ் சென்றவர்களான பூரணசிங்கம் , பூபாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் உதயகுமார் (உதயன்-கனடா), நந்தகுமாரி (குமாரி-ஜேர்மனி), மோகனகுமார் (மோகன்- லண்டன்), பாலகுமாரி (பாலா-இலங்கை), கிருஷ்ணகுமாரி (கிருபா-லண்டன்), கமலகுமாரி (கமலா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இன்பி, சோதிகலா, கமலேஸ்வரன், கணேசலிங்கம், தேவகுமார், சந்திரரூபன் ஆகியோரின் அன்பு மாமியும், நிந்துஷா, நித்தியா, வினோதியா, தெய்வீகன், ஜொசிக்கா, சந்தோஷ், கிருஷிகா, சிம்யா, திவ்யா,சாகித்யன், தபு, சுபா , றொசான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெனி, சாதுர்யன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (19.10.2014) முற்பகல் 10 மணிக்கு அவரது மகளின் இல்லத்தில் (செட்டிக்குறிஞ்சி- பண்டத்தரிப்பு) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்புத்துரை மயானத்தில் (திருவடிநிலை) நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:-குடும்பத்தினர்**
**மகள் (கணேசலிங்கம் பாலகுமாரி)**
**தொ.இல:-0777989879**

(8102)

# ஜெயாவின் விடுதலைக்கு யாழிலும் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

சொத்துக் குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராமுக்கு இந்திய உச்சநீதிமன்றம் நேற்று மதியம் இடைக்கால நிபந்தனை பிணை வழங்கியதையடுத்து யாழ்ப்பாணத்திலும் வெடிகொளுத்தி மகிழ்ச்சி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நடிகரும் முன்னாள் தமிழக முதலமைசருமான மக்கள் திலகம் எம்.ஜி.ராமச்சந்திரனின் நண்பரான யாழ். எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கம் இவ்வாறு யாழில் நேற்று மதியம் வெடி கொளுத்தி ஆரவாரப்பட்டுள்ளார்.

கோப்பாய் சுந்தரலிங்கத்தினால் எம்.ஜி. ராமசந்திரனுக்கு யாழப்பாணம் கல்வியங்காடு சந்தியில் உருவச்சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.இந்த சிலை முன்பாகவே நேற்று மதியம் வெடிகொளுத்தி மகிழ்ச்சி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதையடுத்து தமிழகத்தின் சகல மாவட்டாங்களில் வெடி கொளுத்தியும். இனிப்பு வழங்கியும், மொட்டையடித்தும், அ.இஅ.தி.மு.க தொண்டர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# புலிகள் மீதான தடையை...

ஐரோப்பாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து அந்த அமைப்பின் சார்பில் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் 2011 ஆம் ஆண்டு வழக்குத் தொடரப்பட்டது. அவ்வழக்கில் தீர்ப்பளித்த நீதிமன்றம், விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்தது சரியல்ல எனக் கூறியுள்ளது.

தற்போதைய நிலையில் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் பொருத்தமற்றவை என்றும், அவற்றை அடுத்த 3 மாதங்களுக்குள் நீக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்திற்கு நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள் இயக்கம் நடத்தியது உரிமைப் போராட்டமே தவிர பயங்கரவாதம் அல்ல என்று உலகின் பல்வேறு நீதிமன்றங்கள் ஏற்கெனவே தீர்ப்பளித்துள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு வெளியாகியிருக்கிறது.

இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட 40 க்கும் மேற்பட்ட நாடுகள் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு தடை விதித்திருந்தன.

இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து இங்கிலாந்து உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தில் அடங்கியுள்ள 27 நாடுகளில் விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்படும்.

தொடர்ந்து கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் தடை உடைக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன. ஈழத்தமிழர்களுக்கு தாயகத்தை அமைப்பதற்காக உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல இந்தத் தீர்ப்பு பெரிதும் உதவியாக இருக்கும்.

விடுதலைப்புலிகள் மீது முதன்முதலில் தடை விதித்தது இந்தியாதான். அதைப் பின்பற்றியே மற்றைய நாடுகளும் தடை நடவடிக்கைகளை மேற்கொண்டன. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்க ஐரோப்பிய ஒன்றியத்தின் நீதிமன்றம் கூறியுள்ள காரணங்கள் அனைத்தும் இந்தியாவுக்கும் பொருந்தும்.

எனவே, இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது கடந்த 24 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள தடையை நீக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

# பரிசுத்தினம்

(யாழ்ப்பாணம்)

யா/இணுவில் இந்துக் கல்லூரியின் பரிசுத் தின விழா- 2014 இன்று சனிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு கல்லூரி அதிபர் மு. செல்வஸ்தான் தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ்., கிளிநொச்சி உதவித் தொழில் ஆணையாளர் திருமதி நீலலோயினி ஜெகதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.தர்மலிங்கம் மற்றும் விருந்தினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)

# ஐ.நாவில் முறையிட...

கட்டமைப்பு தொடர்பில் நம்பிக்கையில்லாத காரணத்தினால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் முறைப்பாடு செய்ய உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் முறைப்பாடு செய்ய உள்ளதாகவும் அரசாங்கம் தமது ஜனநாயக உரிமைகளை முடக்கி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் வெள்ளைவான் கலாசாரம் நீடித்து வருவதாகவும் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனக்கு நெருக்கமானவர்களை நீதவான்களாக நியமிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையின் அடிப்படையில் மக்களுக்கு நன்மைகள் கிடைக்கப்பெறாது.

சிறைத்தண்டனை முழுமையாக அனுபவிக்கவில்லை எனவும் இதனால் தமது வாக்குரிமையை ரத்து செய்ய வேண்டிய அவசியமில்லை.

2013-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் தமது பெயர் உள்ளடக்கப்பட்டிருந்தது எனவும் [illegible] தமது பெயர் நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (எ-11)

# நீதியை நிறைவேற்ற...

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னதாக, ஹெல்பிங் அம்பாந்தோட்டை என்ற சுனாமி நிதி ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உள்ளூர் ஊடகம் ஒன்றில் வெளியாகியிருந்தது.

அப்போது, அவரது வேட்பாளர் அந்தஸ்து கேள்விக்குறியானபோது, அவர் மீதான குற்ற விசாரணையை நிறுத்தி சரத் என்.சில்வா தலைமையிலான உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அப்போது, குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆதாரங்கள் மீதான சந்தேகத்தின் பலனை மகிந்த ராஜபக்ஷவுக்கு அளித்து, அவர் சிறையில் அடைக்கப்படுவதிலிருந்து தடுத்ததாக சரத் என். சில்வா கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடந்த நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளார்.

அன்று மகிந்த ராஜபக்ஷவை சிறையில் அடைத்திருந்தால், அவர் இன்று ஜனாதிபதியாக இருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்காது என்றும் கூறியுள்ளார்.

“2005-ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர், ஹெல்பிங் அம்பாந்தோட்டை வழக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விளக்கமறியலில் போட்டு சிறையலடைப்பதற்கான வாய்ப்புத்தான் இருந்தது. நான் அந்த நேரத்தில், எனக்குத் தெரிந்தவரையில் நீதியை நிறைவேற்றினேன்” என்றார் முன்னாள் தலைமை நீதியரசர்.

“அதாவது இந்த சந்தர்ப்பத்தில் இவரை சிறையில் அடைப்பதற்கு சட்டத்தில் இடம் இல்லை என்று கூறினேன். அதனால், அவரால் போட்டியிட முடிந்தது. ஜனாதிபதியாக நியமனம் பெற்றார். இரண்டாவது தவணைக்கும் தெரிவானார்” என்றும் கூறினார் சரத் என். சில்வா.

“இப்போது இவர் செல்கின்ற பாதை முழுமையாக சட்டத்துக்கு விரோதமானது, உச்சகட்ட ஊழல் நடக்கின்றது. ஒப்பந்தங்களில் எந்தளவுக்கு பணம் கொள்ளை அடிக்கப்படுகின்றது என்பது எமக்குத் தெரியும். தங்களின் குடும்பத்தை வளர்த்துவிடுகிறார்கள். பொதுச் சொத்துக்கள் சுரண்டப்படுகின்றன. அதற்காக நான் மன்னிப்பு கேட்க வேண்டுமா இல்லையா?” என்று பிபிசிக்குஅளித்த செவ்வியில் சரத் என் எசில்வா கூறினார்.

மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியி டுவதற்கு அரசியலமைப்புப்படி தகுதியை இழந்துவிட்டார் என்றும் முன்னாள் தலைமை நீதியரசர் அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீட்டில்...

வந்திருந்தார்.

ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கப்பட்டது குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த சுப்பிரமணியன் சுவாமி, ஜெயலலிதாவிற்கு சில நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது. இவர் வீட்டிலேயே தான் இருக்க வேண்டும், கட்சியினரை சந்திக்கக் கூடாது.

மேலும், தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளை ஆளுநர் ரோசையா கண்காணிக்க வேண்டும். அதேவேளையில், தனது கட்சியினருக்கு தேவையான கட்டுப்பாடுகளை ஜெயலலிதா விதிக்க வேண்டும் என்று கூறினார்.

இந்நிலையில், ஜெயலலிதாவின் பிணைக்கு எதிர்ப்பு தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட பாரதிய ஜனதாவின் மூத்த தலைவரும், இந்த வழக்கின் மனுதாரர்களில் ஒருவருமான சுப்பிரமணியன் சுவாமி, ஜெயலலிதாவுக்கு ஜாமீன்வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

இதுகுறித்து அவர் கூறும் போது, ஜெயலலிதாவின் உடல்நிலையை காரணம் காட்டி பிணை கோரிய காரணத்தினாலேயே தான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றார்.

மேலும், தமிழகத்தில் வன்முறைகள் நிகழ்வதாக தான் அறிக்கை அளித்தாலே பிணையை ரத்து செய்வது பற்றி பரிசீலிப்பதாக நீதிபதிகள் தெரிவித்ததாகவும் சுப்பிரமணியன் சுவாமி கூறினார்.

மேலும், ஜெயலலிதா, தமது கட்சித் தொண்டர்களுக்கு தம் கைப்பட ஒரு கடிதம் எழுதி, வன்முறையில் யாரும் ஈடுபடக் கூடாது என்றும், அமைதியைப் பேண வேண்டும் என்றும் கேட்டுக் கொள்வார் என்று ஜெயலலிதா தரப்பு வழக்குரைஞர் நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளதாகக் கூறினார். (எ-11)

## அதிவேகப்...

சாங்கம் திடீரென்று இந்த வைபவத்தை பிற்போட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின் இதற்கான வைபவத்தை நடத்தி, அதன் மூலம் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல அதிவேகப் பாதை நிர்மாணத்தையும் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் எதிர்வரும் நவம்பர் மாதம் இறுதியில் இந்தப் பாதைகளுக்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிய வந்துள்ளது. (எ-11)

## பாதுகாப்பு...

அதேவேளை, பிரித்தானியா போன்ற ஜனநாயக நாடுகளில் சட்டத்துக்கு உட்பட்டு, பதிவு செய்து, செயற்படும் அமைப்புகளை இலங்கை போன்ற நாடுகள் தடை செய்யும் போது, அதற்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான வாய்ப்பு எதனையும் ஐ.நா தீர்மானம் வழங்கியிருக்கவில்லை என்றும் கூறுகிறார்.

ஆகவே பிரித்தானியா இந்த விடயத்தை ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று தமது அமைப்புக் கோரியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (எ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## முல்லைத்தீவில்...

3 ஆம் திகதிகளில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலும், 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதிகளில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவிலும் ஆணைக்குழு அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஆணைக்குவிற்கு ஏற்கெனவே முறைப்பாடுகளை முன்வைத்தவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், புதிதாக முறைப்பாடுகளை பதிவுசெய்வதற்கும் மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் ஆணைக்குழு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தனது பகிரங்க சாட்சி விசாரணைகளை ஏற்கெனவே நடத்தியுள்ளது. (எ-11)

## ஜெய...

அடங்கிய அமர்வு முன்பு வந்தபோது அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவுடன் இந்த வழக்கில் குற்றவாளிகள் என்று தண்டிக்கப்பட்டு சிறையில் இருக்கும் ஜெயலலிதாவின் வீட்டில் வசிக்கும் அவரது தோழி சசிகலா, சசிகலாவின் உறவினரகள் இளவரசி மற்றும சுதாகரன் ஆகியோருக்கும் உச்சநீதிமன்றம் பிணை வழங்கி உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

மேல் முறையீடு தொடர்பிலான அனைத்து நகல்களும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 18ஆம் திகதிக்குள் தயார் செய்யப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தத்து தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் வயது மற்றும் உடல் நலம் ஆகிய காரணங்களின் அடிப்படையில்அவருக்குபிணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் அதிமுக அலுவலகங்களிலும், பொது இடங்களிலும் அதிமுகவினர் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (எ-11)

**வாடகைக்கு**

கிளிநொச்சி சம்பத் வங்கி அருகாமையில் சகல வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 087 8276
077 358 2417 (8095)

3 Days Training Programme
3D Modeling in Auto CAD
Mr.K.N.Mugunthan(BA)
University Of Peratheniya University Of Moratuwa
Architecural CAD Centre
Contact No:071-8617972

**கட்டார் நாட்டின் தலைநகரத்தில் உள்ள Hamad சர்வதேச விமான நிலையத்தில் புதிய வசதி சேவைக்காக நிர்வாக கட்டக அமைப்பில் பணிபுரிவதற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளன உடன் முந்துங்கள்.**

| Categories | Salary | Categories | Salary |
|---|---|---|---|
| Maintenance Manager | 29000 | Sr.Technical Officer (Electrical) | 5000 |
| Precinct Manager | 29000 | Sr.Technical Officer (Electronics) | 5000 |
| Quality Control Manager | 29000 | Administrative Officer | 3500 |
| Training Manager | 29000 | Sr.Technical Officer (Civil/Electronics/HVAC/Mechanical) | 3229 |
| Administrative Manager | 29000 | Store Keeper | 3600 |
| Deputy Manager (Electrical/Electronic/ Mechanical) | 22000 | Supervisor (Cleaning) | 2600 |
| Zone Manager | 22000 | Administrative Assistant | 2400 |
| Safety Manager | 22000 | Building Management System Operators | 2400 |
| Planner | 8000 | Fault Reporting Center Operators | 2400 |
| Procurement Officer | 8000 | Help Desk Operators | 2400 |
| Accountant | 8000 | Heavy Driver | 2407 |
| Safety Officer | 7200 | HVAC Mechanic | 1446 |
| Sr.Administrative Officer | 6600 | Locksmith | 1400 |
| Engineer (Civill) | 6000 | Locksmith Assistant | 1400 |
| Engineer(Machanical) | 6000 | Mechanic (Mechanical Technician) | 1400 |
| Engineer(Electrical) | 6000 | Technician (Mechanical, Electronics,Electrical,Civil | 1320 |
| Engineer(Electronics) | 6000 | Plumber | 1200 |
| IT Support | 5000 | Light Driver | 1292 |
| Sr.Technical Officer (Civil) | 5000 | Carpenter | 1113 |
| Sr.Technical Officer (Mechanical) | 5000 | Cleaners | 900 |

(உணவு, தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்)
நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :- உதயன் விருந்தினர் விடுதி இல.20, கன்னாதிட்டி வீதி, காளிகோவில் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
காலம் :- 19 ஆம் திகதி நாளை ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- மு.ப 9.00 - பி.ப 2.00 மணிவரை
ஆவணங்கள் : பாஸ்போட், சுயவிபரக்கோவை, Photo, கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
முக்கிய குறிப்பு :- பயணத்திற்கான வங்கிக் கடன் வசதியும் பெற்றுத்தரப்படும்.

உடன் தொடர்புகொள்ள:- Lanka VoiceAdve (Jaffna) :0779527575
Lanka VoiceAdve(Vavuniya, Mannar)-07666 97789
Capitalrecruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, Grandpass, Colombo-14.
LL No : 2248
(c-8792)

**காணி விற்பனைக்கு**

மருதனார்மடம், கே.கே.எஸ் வீதியில் பிரதேச சபைக்கு முன்பாக 2 ஆவது காணி 6 1/2 பரப்பு விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
077 550 4438 (8086)

**அமெரிக்க லொத்தர் விசா**

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு , இலவசமாக உங்கள் வெற்றி வாய்ப்பினை உறுதி செய்துகொள்ளுங்கள்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
2015 இல் A/L எடுப்பவர்கள் கூட விண்ணப்பிக்கலாம்
உடனே விரையுங்கள் - தாமதம் வேண்டாம்
அலட்சியம் வேண்டாம் நம்பிக்கையுடன் பதியுங்கள் வெற்றிபெறுங்கள்

கிளிநொச்சி
A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால்
0771516537
யாழ்ப்பாணம்
49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால்
0773867257
நெல்லியடி
மூடக்காட்டுச்சந்தி
0776699892
வல்வெட்டித்துறை
யாழ்வீதி - வல்வெட்டி
0776697960

குறைந்த கட்டணத்தில் V2 Travels and Tours (Pvt) Ltd (8092)
● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு துரிதபொதிகள் சேவை

இன்று முதல்
**தீபாவளியை முன்னிட்டு**
மாபெரும் அதி விசேட தள்ளுபடி
வீடு மற்றும் அலுவலக தளபாடங்கள்
40 % வரையிலான விலைக்குறைப்புடன்




230, நாவலர் றோட் (இலுப்பையடி சந்திக்கும் அத்தியடி சந்திக்கும் இடையில்) தொ.பே : 0773583879, 0778314201

விரும்பிய எந்த நாட்டிலும் படிக்க - உழைக்க - குடியேற
**சிகரம் தரும் தெரிவுகள்!**

கனடா: 3 வருட Multiple Entry Visa
பிரித்தானியா: வேலைவாய்ப்புடன் படிக்க, உழைக்க 4 வருட விசா
நியூசிலாந்து: நிரந்தர குடியுரிமை (PR) ஏற்பாட்டுடன் படிக்க உழைக்க
அவுஸ்ரேலியா: வங்கிப்பண வைப்பு இன்றி மாணவர் விசா அனுமதி
சுவிற்சர்லாந்து: 3 இலட்சம் வருமானத்துடன் ஹொட்டேல் பயிற்சி
கனடா, அவுஸ்ரேலியா: Skilled Migration நிரந்தர குடியுரிமை
மலேசியா: ஒரு இலட்சம் வருமானத்துடன் ஹொட்டேல் பயிற்சி & வேலை
(சி-8795)

Visit Visa, Work Visa & Visa Rejection Appeal
SIKARAM Education Abroad & Visa Solutions
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11
எமது சேவைகள் பற்றி முழுமையான விபரங்களை www.sikaram.lk இணையத்தில் பார்வையிடுங்கள்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



செல்வி
**தனபாலசிங்கம் சரண்யா**

தருமபுரம் அ.த.க பாடசாலை (No I) மாணவி தனபாலசிங்கம் சரண்யா 2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்ததையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன், இவரை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோருக்கும் நன்றிகளைக் கூறி இவர் மேன்மேலும் பல சித்திகள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
செல்லப்பிள்ளையார் அக்றோ சென்ரர்.
(சி-8794)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.